உழவன்

மலர் 3 | மே 1950 | இதழ் 3

4 அணா

விவசாயிகளின் தமிழ் மாதப் பத்திரிகை.

4 அணா

தந்தி விலாசம் : "ஞானம்பிகா" டெலிபோன் : 156.

ஞானம்பிகை மில்ஸ், லிமிடெட்.

ஞானம்பிகை மில்ஸ் P. O., கோயமுத்தூர்.

10 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை முறுக்கு

இரட்டை முறுக்கு நூல்

தயார் செய்கிறோம்.

★ இந்தியர் மூலதனம்

★ இந்தியர் உழைப்பு

★ இந்தியர் நிர்வாகம்

மொத்தக் கதிர்கள் 11,200.

நம் நாட்டுத்தொழிலை ஆதரியுங்கள்

V. C. வெள்ளியங்கிரிக்கவுண்டர் & பிரதர்ஸ்,

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரட்டரீஸ்.

உழவன்

(தமிழ் மாதப் பத்திரிகை)

(கோவை வேளாளர் வாலிப சங்கம் லிமிடெட் வெளியீடு)

ஆசிரியர் :

ரா. கிருஷ்ணசாமிக் கவுண்டர்.

வருட சந்தா	...	ரூ.	3—0—0
ஆறு மாத சந்தா	...	ரூ.	1—8—0
தனிப்பிரதி	...	ரூ.	0—4—0

விளம்பர விகிதம்.

அட்டை வெளிப்புறம்	ரூ.	125
,, உட்புறம்	ரூ.	100
,, உட்புறம் ½ பக்கம்	ரூ.	60
மற்ற பக்கம் 1-க்கு	ரூ.	60
அரைப் பக்கம்	ரூ.	35
கால் பக்கம்	ரூ.	20

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

"உழவன்" காரியாலயம்,

வேளாள அச்சுக்கூடம்,

14/75, ஒப்பணக்காரவீதி,

கோயமுத்தூர்.

பொருள் அடக்கம்

கூட்டுறவும் — விவசாயமும் (தலையங்கம்)	2
பப்பாளி (G. D. நாயுடு)	6
புகையிலை (ச. கு. கணபதி ஐயர்)	9
இரு பணிகள் (ஏர்க்கிழார்)	12
சென்னை மாகாணத்தில் குளத்துப் பாசனமும் உணவு உற்பத்தியும் (சென்னை மாஜி பிரதமர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார்)	14
மண்வள ஆராய்ச்சி	20
ஔவையார் என்ன கூறுகிறர்	22
உழவனும் பட்சிகளும்	23
இனிய தொழில் (E. பாலகிருஷ்ண நாயுடு B.A.B.L.)	27
கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை C. M. ராமசந்திர செட்டியார் B.A.B.L	29

குறிப்பு:- "உழவனில்" வெளியாகும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனையே அவை யாரையும் குறிப்பிடுபவைகளல்ல.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

ஆண்டு 3	மே 1950	விக்ருதி
மாதம் 3	(வேளாளர் வாலிப சங்கம் லிமிடெட், வெளியீடு.)	சித்திரை

விவசாயமும் கூட்டுறவும்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவு நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகிறது. உற்பத்திச் செலவுக்குப் போதிய அளவு விலையோ கிடைப்பதில்லை. எதிர்பார்ப்பதற்கும் இல்லை. ஆகையால் விவசாயிகள் புத்திசாலித்தனமாகத் தங்கள் உற்பத்திச் செலவைக் குறைத்துக்கொள்ள வழிதேடுவதே அறிவுடைமையாகும். இல்லையேல் இவர்களுடைய பொருளாதார நிலைமை மிகவும் சீர்குலைந்து அழிந்து படுவது திண்ணம்.

உற்பத்திச் செலவைக் குறைக்க ஒரேவழி விவசாயத்துக்கு இன்றியமையாத பல துறைகளிலும் உழவு, விதைப்பு, அறுவடை, தண்ணீர் பாய்ச்சுதல், உரமிடுதல் முதலிய ஒவ்வொரு பகுதிக்கும் அவசியமான சிக்கனமான கருவிகளையும், யந்திரங்களையும் உபயோகிப்பதேயாகும். நம் நாடு அமெரிக்கா முதலிய தேசங்களைப்போலப் பெரிய அளவில் யந்திர சாதனங்களை உபயோகிக்கத் தகுதியுள்ள பெரும் விவசாயிகள் நிறைந்த நாடல்ல. இம்மாதிரி தகுதிவாய்ந்த யந்திரங்களை உபயோகிக்கத்தக்க பெரிய விவசாயிகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுள்ள ஒரு சிலரே யாவர். அவர்களிலும் முற்போக்குக் கருவிகளையும் உபயோகிப்பவர்களும், உபயோகிக்க விரும்புபவர்களும் ஒன்றிரண்டு பேர்களாவது உண்டோ என்று ஐயப்படக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். சிறந்த கல்வி யறிவுள்ளவர்களும் முற்போக்குச் சிந்தனை படைத்தவர்களும் இத்தொழிலில் ஈடுபடாமையே இதன் முக்கிய காரணமாகும்.

சாதாரணமான ஏழைக் குடியானவர்களே நிறைந்த நம் நாட்டில் மிகுந்த செலவில் அமைக்கக்கூடிய கருவிகளைகொண்டு விவசாயம் நடத்த ஒரேவழி கூட்டுறவு முறையேயாகும். தற்சமயம் உணவுற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு முறையில் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் உதவக் கூடுமோ அந்தந்த வகையில் உதவி செய்யச் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. ஆகையால் காற்றுள்ளபோதே

தூற்றிக்கொள்ள முற்படவேண்டும். இம்மாதம் 19-ம் தேதி சென்னை உணவுற்பத்திக் கமிஷனர் ஆபீசில் பல பிரமுகர்கள் கூடிக் கிராம கூட்டுறவு சங்கங்களின் மூலம் சர்க்காரின் உணவுற்பத்திப் பெருக்குத் திட்டத்தை எவ்வாறு அமுல் நடத்தலாமென்று விவாவதித்ததாக தெரிகிறது. தீவீர உணவுற்பத்திக்காகத் திட்டங்கள் பல சர்க்கார் வகுத்து விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் முறையில் மதுரை, திருச்சி, கோவை, நெல்லூர், கிழக்கு தோதவரி, குண்டூர் முதலிய பொறுக்கியெடுக்கப்பட்ட ஜில்லாக்களில் கிராம கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த சர்க்கார் அனுமதித்துள்ளதாகத் தெரிகிறது.

விவசாயக் கருவிகளை அதிக பக்ஷம் உபயோகிப்பதற்கான வழியும் வகையும் கண்டு பிடித்துத் தீவிர உணவுற்பத்தித் திட்டங்களைக் கண்டுபிடித்து அந்தந்த பிரதேசங்களுக்கு அவசியமான தனிப்பட்ட தேவைகளை கண்டு பிடித்து கஷ்டங்களையும் கவனித்து சாகுபடி செய்யும் குடியானவர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே தொடர்பேற்படுத்தி எல்லாவகையிலும் உதவி புரிவதே இக்கிராம கூட்டுறவு சங்கங்களின் நோக்கமாகும். இக்கூட்டுறவு சங்கங்கள் பல காரிய கூட்டுறவு சங்கங்களாக ஒவ்வொரு கிராமத்துக்கும் தனித்தனியாக அமைக்கப்படும். ரசாயன உரம், சாதாரண உரம், இரும்பு, உருக்கு விவசாயக் கருவிகள் யந்திரங்கள் முதலியவைகளை உபயோகிப்பதற்கு வேண்டிய வசதிகளை இச்சங்கங்கள் மூலம் செய்து தரவும் கிராம கழிவுகளைக் கம்போசிட் உரங்களாகச் செய்யவும் பல்வேறு உணவுப் பெருக்குத்திட்டங்களுக்கும் துணை புரியவுமே இச்சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்த அரிய சமயத்தைக் குடியானவர்கள் பயன்படுத்திக் கொண்டு பல துறைகளிலும் முன்னேற வழிசெய்யவேண்டியது மிகமிக அவசியமாகும். இச்சங்கங்கள் ஒழுங்காக வேலை செய்யவேண்டுமானால் இவைகளைக் கவனித்து முன்னுக்குக் கொண்டுவரச் சுயநலமின்றிப் பாடுபடக்கூடியவர்கள் ஒவ்வொருவராவது முன்னுக்கு வரவேண்டும். அங்கத்தினர்களாகச் சேருபவர்கள் நன்கு ஆதரவு தருவதுடன் ஒற்றுமையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் அதிகம் தேவை. கூட்டுறவுச்சங்கம் விருத்தியடையவேண்டும் என்றும் ஒரே நோக்கம் எல்லா மனத்திலும் நிறைந்து நிற்கவேண்டும். சிறிது கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கொஞ்சகாலம் ஒதிக்கி வைத்துவிட்டு மேற்சொன்ன சிறந்த பண்பாடுகளுடன் மனத்தைப் பழக்கிச் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வார்களேயானால் அதன் பலனை மிகக்குறுகிய காலத்தில் எளிதாக அநுபவிக்கலாம். அப்பேர்ப்பட்ட தகுதி வரும்வரை சற்றுப்பொறுமையுடனும், நிதானத்துடனும் நடந்து கொள்வார்களேயானால் பின் பிளவுகளோ வேற்றுமைகளோ நுழைய இடமில்லாத அளவில் அதன் பெரும் பயனை எல்லோரும் அநுபவிக்க முடியுமென்பதை அநுபவ ரீதியாகத் தாமும் உணரலாம். பிறருக்கும் வழி காட்டலாம்.

ஆகவே குடியானவர்கள் முன்னேறுதற்குள்ள எளிதான ஒரே வழி கூட்டுறவு மார்க்கமேயாகும் என்பதையும் டென்மார்க்கு முதலிய மிகச் சிறு நாடுகள் இம்முறையை அனுசரித்து மிக முன்னேற்றமடைந்துள்ளன என்பதையும் நன்குணரவேண்டும்.

விவசாயிகள் விரும்பிய லெவி முறை இதுதானா?

தீவிரக்கொள்முதல் முறையில் விவசாயிகளுக்குத் தொல்லை அதிகமாக இருக்கிறது; சில்லரை தேவதைகளின் திருவிளையாடல்களுக்குப் பலியாக வேண்டியிருக்கிறது; அதிலும் சிறு குடியானவர்கள் மிகமிகப் பாதிக்கப்படுகிறார்கள்; லெவி முறை யென்னும் புதுமுறை வந்தால் ஏதோ ஓரளவு ஏற்றத் தாழ்வில்லாமல் கொஞ்சம் கொடுத்துவிட்டால் நிம்மதியாக வாழலாம் என்றெல்லாம் நமது கோவை ஜில்லா விவசாயிகள் சங்கத்தின் மூலமும் பத்திரிகைகளின் மூலமும் பறை சாற்றப்பட்டது. கோவை ஜில்லா கலெக்டர் திரு மாரீஸ் அவர்களும் இம்முறை குடியானவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமென்றும் குடியானவர்களுக்கு ஏராளமான சௌகரியம் இதனால் ஏற்படுமென்றும், கொடுக்கவேண்டிய அளவு இவ்வளவுதானென்றும், அதைக் கிராமச் சாவடிகளில் பிரசுரிக்கப்படுமென்றும், அந்த பிரசுரத்தில் கொடுக்கவேண்டிய அளவு விவசாயத்தின் விஸ்தீரணம் எல்லாம் விவரமாக இருக்குமென்றும், குடியானவர்களுக்கு அதில் ஏதாவது குறையிருந்தால் சொல்லிச் சரி செய்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கபடுமென்றும். கலெக்டர் துரையால் கூட்டங்களிலும் அறிக்கைகள் மூலமும் வெளியிடப்பட்டு வந்தது. ஆனால் நடைமுறையில் எங்காவது ஓரிடத்தில் நடந்திருக்குமோ என்று அறிய முடியவில்லை. இம்முறை அமுல் நடத்தப்பட்ட விதத்தையும் ஏழைக் குடியானவர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் ஓரளவு எடுத்துக்காட்டுவாம்.

கோவை தாலுக்கா எட்டிமடை கிராமத்தில் கிருஷ்ண கவுண்டர் என்பவர் ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்திருந்தார். அதுவும் தோட்டக்கால் பூமியில் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்யப்பட்டது. தண்ணீர் பற்றுக்குறையால் மிகவும் பாதிக்கப்பட்டதோடல்லாமல் மலைப்பிரதேசமாகையால் காட்டுப் பன்றிகளாலும் அழிக்கப்பட்டிருந்தது' அப்படியிருந்தும் அவருக்கு 22 மணு 28 படி டிமாண்டு போடப்பட்டது. அவர் தனக்குப் போடப்பட்ட டிமாண்டு முறையற்றதென்றும் மகசூல் அறுவடைக்குமுன் நேரில் பார்த்தால் உண்மை விளங்கும் என்றும் தாலூக்கா சப்ளை ஆபீசர் அவர்களுக்கு விண்ணப்பித்தார். விண்ணப்பித்ததோடல்லாமல் எப்படியாவது தாலூக்கா சப்ளை ஆபீசரை நேரில் கூட்டிக்கொண்டுவந்து காட்டவேண்டுமென்று பிரயத்தனமும் பட்டார். அதனால் பலன் ஒன்றும் ஏற்படமில்லை. ஆனால் மறுபடியும் மேற்கண்ட 22 மணங்கு 28 படி இந்த 1 ஏக்கர் சாகுபடிக்கு அளக்காவிட்டால் உடனே பிராசிகூஷன் செய்யப்படுமென்று நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டிருக்கிறது.

இதேமாதிரி இன்னும் கிணற்றுத் தண்ணீரைக் கொண்டு சாகுபடி செய்ததில் தண்ணீர் தட்டுதலாலும், காட்டுப்பன்றிகளின் உபத்திரவத்தாலும் பாதிக்கப்பட்ட $\frac{1}{2}$ ஏக்கர் $\frac{3}{4}$ ஏக்கர் சாகுபடி செய்தவர்களுக்கும் சாகுபடி அரவே செய்யாதவர்களுக்கும் கூட டிமாண்டு போடப்பட்டது, எல்லோரும் நிலைமையை கலெக்டர் T, S. O. முதலிய அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தும். நேரில்வந்து பார்க்கும்படி வேண்டியும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. எல்லோருக்கும் முன் கொடுக்கப்பட்ட டிமாண்டு நோட்டீஸ்படி கொடுக்காவிட்டால் பிராசிகூஷன் செய்யப்படுமென்று நோட்டீஸ் மறுபடியும் சர்வு செய்யப்பட்டிருக்கிறது.

இதுதானா லெவி முறை? இது எந்த முறையைச் சேர்ந்ததென்று எம்மால் அறிய முடியவில்லை. உற்பத்தியை பெருக்க இதுவா வழியென்று கேட்கிறோம். குடியானவர்களை நசுக்கி அவர்களை வாழவொட்டாமல் தடுப்பதற்கு ஓர் விமோசனமில்லையா?

உற்பத்திக்குத் தரும் ஊக்கங்கள் இவைதானு?

விமானப் போக்கு வரத்தைப் பெருக்க விமானங்களுக்கு அளிக்கப்படும் பெட்ரோலின் மீதுள்ள விற்பனை வரியைக் குறைத்திருக்கிருர்கள். சென்னை மகாணத்தில் பெட்ரோல் நிலைமை மிக மோசமாக இப்பதாக நிதி மந்திரி கோபால் ரெட்டி குறிப்பிடுகிருர். ஆனல் அதே சமயத்தில் விமானங்களுக்கு வழங்கும் பெட்ரோலின் மீதுள்ள 4 அணு விற்பனை வரியைக் குறைப்பதின் மூலம் சென்னை மாகாணம் மாத்திரம் ஆண்டொன்றுக்கு 1 லக்ஷத்து நாற்பதினுயிரம் ரூபாய் நஷ்டப்படுகிறது என்று கூறுகிருர். விமானப் போக்கு வரத்தைப் பெருக்க அரசாங்கம் நஷ்டப்படவும் தயாராக இருக்கிறது. ஆனல் உணவுற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று ஓயாது கூக்குறலிடும் இதே அரசாங்கம் உற்பத்திக்குதவும் சிறந்த உழவு யந்திரங்களுக்கு மாதத்துக்கு 2 நாட்களின் உபயோகததுக்கும் கூடப் பெட்ரோல் தர மறுக்கிறது. இப்போக்குகள் விந்தையாகத் தோன்றுகின்றன. அநேகம் விவசாயிகள் தண்ணீர் இறைப்பதற்கு வைத்துள்ள கெரசன் யந்திரங்களை ஸ்டார்ட் செய்வதற்குத் தேவையான மாதம் இரண்டொரு கேலன் பெட்ரோல் பெறுவதானுலும் அது குதிரைக் கொம்பேதான். இந்த இரண்டொரு கேலன் பெட்ரோலுக்கும் போடப்படும் விண்ணப்பங்கள் தாலூக்கா விவசாய டெமான்ஸ்ரேட்டர், ஜில்லா விவசாய ஆபீசர், விவசாய ஜாயிண்ட் டயரக்டர் ஆகிய இத்தனை பேர்களையும் கடந்து சென்னை மாகாண பெட்ரோல் ரேஷனிங் ஆபீசரின் திருக்கரத்திலிருந்து அனுமதிகிளம்ப வேண்டியிருக்கிறதென்றல் இது இக்காலத்தில் எவ்வளவு கடினமான காரியமென்பதை எண்ணினலே நெஞ்சு திடுக்கிடுகிறது. இவர்கள் கள்ள மார்க்கட்டுகளில் பன்மடங்கு விலை கொடுத்தே வாங்க வேண்டியிருக்கிறது இவ்வளவு அவசிமான காரியத்துக்குத் தேவையான இந்தச் சிறிதளவு பெட்ரோலுங்கூடக் கிடைப்பது இவ்வளவுகடினமாக இருக்கிறது. ஆனல் கள்ள மார்க்கட் காரர்களுக்கு எவ்வளவு எளிதாக கிடைக்கிறதென்பதிலிருந்து இந்தக் கட்டுப்பாட்டு முறைகள் ஊழலை ஓரளவு ஊகிக்கலாம்.

சித்திரைப்பட்டச் சோளமும், அதன் நிலையும்.

கோவை ஜில்லாவில் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் சித்திரைப்பட்டச் சோளம் ஓர் முக்கிய வேளாண்மையாகும். அநேக மாகத் தோட்டக்கால்களில்தான் பயிர் செய்யப்படுகிறது. பல ஆண்டுகள் பருவ மழை தவிறியும் சலியா உழைப்பின் பேரில் ஏராளமான பணம் செலவு செய்தும் கிணறுகளை ஓயாமல் தோண்டி நீர்பாய்ச்சி ஓரளவு நல்ல நிலையில் இருக்கிறது, சோளத்தின் பூட்டைகள் வெளியில் வரும்பொழுதே பூச்சிகள் தயாராகத் தாக்க காத்துக்கொண்டு நிற்கின்றன. விவசாய இலாக்கா பூச்சிகளைத் தொலைக்க எவ்வித முயற்சியும் எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை. உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால் ஏராளமான தானியம் சேதமாகாமல் காக்கப்படும். இனி மேலாவது விவசாய இலாகா தாமதமில்லாமல் தக்க நடவடிக்கை யெடுக்குமென்று எதிர்பார்க்கிறேம்.

கம்போசிட் மென்யூர் (கலப்புரம்)

ஒவ்வொரு முனிசிபாலிட்டியும் கம்போசிட் மென்யூர் என்னும் நகரத்தில் சேமிக்கப்படும் குப்பை கூளம் முதலிய கழிவுகளையும் மலம் மூத்திரம் முதலிய கழிவுப் பொருள்களையும் முறையோடு கலக்கிச் செய்யப்படும் கலப்பு சத்தை தயார் செய்து விவசாயிகளுக்குத் குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்று சென்னை அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. ஒரு சில நகர சபைகளே இம்முறையில் ஒழுங்காக நடப்பதாகச் சொல்லப்படுகிறது. பல நகர சபைகள் நேர்மையாக நடப்பதாக தெரியவில்லை,

கோவை நகர சபையார் தாம் ஓரளவு தயாரித்த கம்போசிட் உரத்தையும் நியாய விலைக்கு விற்க இஷ்டமில்லாமல் ஏலத்தில் விட்டுக் கொள்ளை லாபம் அடிக்கவேண்டுமென்று அரசாங்கத்துக்கு எழுதியிருப்பதாகத்தெரிகிறது கிராமத்திலுள்ள மக்களிடம் உற்பத்திச் செலவுக்குப் போதாத விலையில் அடித்துப்பிடிங்கி நகரமக்களுக்குச்சோறு போட்டும் அரசாங்கம் நகரத்திலுள்ள எச்சிக்கலை குப்பை கூளம் மல மூத்திரம் முதலிய கழிவுப்பொருள்களையுங்கூடக் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்குக் குறைந்த விலைக்குக்கொடுக்க ஏற்பாடு செய்யாவிட்டால் அது மிகவும் வருத்தத்தக்கதேயாகும்.

பப்பாளி

G. D. நாயுடு.

நான் சில வருஷங்களுக்குமுன்பு வாழைப்பழத்தைப்பற்றி சில பரிசோதனைகளை நடத்தினேன்.

இச்சோதனைகளை நடத்துவதற்கு ஆறு ரகங்கள் தேர்ந்து எடுத்துக்கொண்டேன். நான் நடத்திய சோதனைகள் சாதாரணமாக மற்றவர்கள் செய்வதுபோல் இரண்டு ஜாதிச் செடிகளை ஒன்றுகச் சேர்த்தி ஒட்டவைத்து நடத்திவருவது போலல்லாமல் வேறுபட்ட முறையில் நடத்தினேன். குளுகோஸ், உப்பு, பசும் சாணத்தின்சத்து, சாராயம், தண்ணீர் கலந்த திராவகம் இவைகளை ஒன்ருகக் கலந்த மருந்தைக் கொண்டு ஆறு கன்றுகளுக்கு இஞ்செக்ஷன் கொடுத்தேன் சிறிது காலத்திற்கெல்லாம் இஞ்செக்ஷன் செய்யப்பட்டகன்றுகளிலிருந்து எடுக்கப்பட்ட அதே சத்தைதிரும்பவும் பலரகப்பட்ட ஆறுவித கன்றுகளுக்கு இஞ்செக்ஷன் செய்தேன். இம்முறைகளால் நல்ல இனிப்பும், மிருதுவானதும் உள்ளே விதைகளில்லாதுமான பழங்களாக விளைந்தன. எல்லா ஜாதிப்பழங்களின் சுவையும் கலந்து இருந்தன. இதேமுறை ஆரஞ்சுப்பழங்கள் விஷயத்திலும் கையாளப்பட்டன. பலன் அவ்வளவு திருப்திகரமாயில்லை. இதுபற்றி இன்னும்பரிசோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இது போன்ற பரிசோதனைகள் சிறிது மாறுதலுடன் பருத்தி, தானியவகைகள், துவரை, பப்பாளி முதலியவற்றுள் நடத்தியதில் ஒருவகைப் பருத்தி பரிசோதனையால் நல்ல மகசூலை அதிகரிக்கக்கூடிய சக்தி இருப்பதாக தெரியவந்தது. தானியவகைகளில் ஒவ்வொன்றும் ஆறுமுதல் முப்பத்தொன்பது கதிர்கள்வரை கொடுத்தன. கதிர்கள் அதிகரித்துக்கொண்டேபோனதில் ஒரு குறிப்பிட்ட செடியில் மூன்றில் ஒரு

பாகம் நல்லமணிப்பயராகவும் மற்றவை சிறு ரகப்பயராகவும் காணப்பட்டன.

துவரையிலும் சில விசேஷங்கள் காணப்பட்டன. சிலவகை பயிர்கள் அதிக உயரமாகவும் மற்றும் சிலவகை குள்ளமாக வும் வளர்ந்தன, சில பயிர்கள் கூடுதலான விளைச்சலைக்கொடுத்தன. ஒரு துவரம் செடி யிலிருந்து முதல் அறுவடையில் மட்டும் பட்டணம் படிக்கு ஒருபடி கொண்ட விளைச் சல் கொடுத்தது. ஆனால் அதுமாதிரி பதி னைந்து அடி உயரம் வளர்ந்த ஒரு செடியி லிருந்து அவ்வளவாக விளைச்சல் கிடைக்க வில்லை.

பப்பாளி பழ பரிசோதனை வேறுவித மான பலனைக்கொடுத்தது. பலவிதமான பழச்சத்துக்களைக்கொண்டு நான்கு ஜாதி களுக்கு இஞ்செக்ஷன் கொடுத்துப்பார்த்த தில் பல விதமான உருவம்கொண்ட பழங் கள் காய்த்தன. சென்ற ஜுலை மாதத்தில் நட்ட ஒரு செடியானது பிப்ரவரி மாதத்தி லிருந்து பழங்கள் தோன்ற ஆரம்பித்துவிட் டன. இந்த இரண்டுமாத இடைக்காலத்தில் ஒவ்வொரு செடியிலிருந்தும் இருபத்தைந்து பழங்களுக்கு அதிகமாகவே காப்புபிடித்தது. ஒவ்வொரு பழத்தின் எடையும் 3 முதல் 8 பவுண்டு. இதில் ஒரு ஆச்சரியம் என்ன வென்றால் செடியின் அடிப்பாகத்திலுள்ள கிளைகளிலிருந்தே ஐந்து அல்லது ஆறு அடிவரைக்கும் பலவகைமாதிரியான உருவங் களையுடைய பழங்களை ஈன்றது. உதாரண மாக ஒரு செடியானது ஒரேசமயத்தில் உற்பத்தியான பழங்களில் ஒன்று தர்பூசனி உருவத்திலும். இன்னொன்று தக்காளி உரு வத்திலும், அடுத்தது வெள்ளரி உருவத்தி லும், கடப்பை கோசா பழ உருவத்திலும், மாங்காய்போன்ற உருவத்திலும் மற்றும் சில சாதாரண பப்பாளி பழ உருவத்திலும் பழங்களை கொடுத்தது.

தவிர சிலவகை செடியிலிருந்து எல் லாம் ஒரே தர்பூசணி உருவமாகவும், இன் னும் சில எல்லாம் ஒரே தக்காளிப்பழ உரு வத்திலும் மற்றும் சில எல்லாம் ஒரே வெள் ளரிப்பழ உருவத்திலும் பழங்களை கொடுத் தன. இவற்றில் வெள்ளரி உருவத்தில் உற் பத்தியான பழங்கள் நீங்கலாக மற்றெல்லா உருவத்திலும் தனித்தனியே விளைந்ததும், ஒன்றாக விளைந்ததுமான பழங்கள் எல்லா வற்றின்சுவையும் ஒரே மாதிரியாகவே இருந் தன. தற்சமயம் இருக்கும் செடிகளை சாதாரண முறையிலே பயிரிடப்பட்டன.

ஆனால் தற்சமயம் இருக்கும் பயிர்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய விதை களைத்தந்த செடிகளுக்கு இஞ்செக்ஷன் முறை கொடுக்கப்பட்டது. மூன்றும் நாலாம் தலைமுறையாக காய்க்கும் செடிகளும் மேற் கூறிய பலன்களையே கொடுக்கின்றன. இடங் களின் பருவ நிலைக்குத்தக்கவாறும் மண் வளம், நீர் வளம் இவைகளை அனுசரித்தும், பழத்தின் தரமும், விளைச்சலும் வேறுபடு கின்றன. இந்த விதைகளை வேறு இடங்க ளில் பரீக்ஷார்த்தம்செய்து பார்க்கப்பட்டது. ஓரிரண்டு இடங்களில் தற்போது விளைந் துள்ள இடத்தைக் காட்டிலும் நல்லபலனும், சில இடங்களில் ஒன்றும் இல்லாமல் ஏமாற றத்தையும் அளித்தன.

சதாரண செம்மண் நிலத்தில் விவசாயி வழக்கமாக உபயோகிக்கப்படும் எருக்களை கொண்டே நம்பிரதேசங்களில் எல்லா சோ தனைகளும் நடத்தப்பட்டன. தொடர்ந்து விஞ்ஞான ரீதியில் பரிசோதனைகளை நடத் தினால் அதிக விளைச்சலும் நல்லதரமான பழங்களும் எதிர்பார்க்கலாம்.

நான் காலேஜில் படித்துப்பட்டம்பெற்ற ஒரு விஞ்ஞானி அல்ல. நான் எளியமுறை களில் சாதாரண ஆராய்ச்சிகளையே பின் பற்றினேன்.

நன்றாகப்பழுப்பதற்கு சற்று முன்பா கவே பழங்களைப்பறித்துவிட்டால் அவை கள் ஆயிரம் மைல்களுக்கப்பால் கடத்திச் செல்வதற்கு தாங்கும் என்பது நடைமுறை யின் மூலம் நிரூபிக்கப்பட்டது. சாதாரண மாக இப்பழங்கள் அணு ஆறுமுதல் அணு 12 வரையிலும் விற்கப்பட்டு வருகின்றன பம்பாயில் ரூபாய் ஒன்றுமுதல் இரண்டு வரையிலும் மற்றும் சில இடங்களில் அணு மூன்று முதல் ஆறுவரையிலும் விற்கப்படுவ தாக எனக்குச்சொல்லப்பட்டது.

ஜீரணத்திற்காக யாராவது இப்பழங் களை உட்கொண்டால் இவைகளினால் நல்ல பலன் உண்டு என்று நான் கூறுவேன்.

அட்டைப்படம்.

பட்டம், பதவிகளை நாடாமல், கல்லூரிகளில் ஓதாதுணர்ந்த விஞ்ஞானி திரு. G. D. நாயுடு அவர்களை நம் நாடு நன்கறியும். அன்னாரின் ஆராய்ச்சியின் முடிபாக விளங்கும் ஒரே செடியில் தோன்றிய பற்பல உருவங்களையுடைய பப்பாளிப் பழங்களுடன் காட்சியளிக்கிறார். இந்த ஆராய்ச்சியைப்பற்றிய விவரமான கட்டுரையொன்று திரு. G. D. நாயுடு அவர்களால் வெளியிடப்பட்டதை இதே இதழில் காணலாம்.

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்திய நம் உழவன் அட்டைப் படத்தில் திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் விஞ்ஞான ஆராய்ச்சியால் உற்பத்தி செய்யப்பட்ட பருத்திச்செடியின் உருவம் பிரசுரிக்கப்பட்டிருந்ததை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.

இந்தப் பருத்திச் செடிகள் சுமார் 3 ஏக்கர்வரை திரு. நாயுடு அவர்களின் போத்தனூர் தோட்டத்தில் நடப்பட்டு பலன் தந்துகொண்டிருக்கின்றன. 15 அடிவரை வளர்ந்திருக்கிறது. ஏக்கருக்கு சுமார் 500 செடிகள்தான் நடமுடியும். சில செடிகளில் 700, 800 காய்களுக்கு மேலும் இருக்கின்றன. பஞ்சின் இழை 1 அங்குலத்திற்கு மேலும் இருக்கிறது. கொட்டை சாதாரண கம்போடியா பருத்திக்கொட்டையைக் காட்டிலும் சத்தும் ருசியும் உள்ளதாகத் தெரிகிறது. அதே பூமியில் உள்ள கம்போடியாச் செடிகளின் மகசூலைப்போல இரட்டிப்பு மகசூல் கொடுப்பதாகத் தெரிகிறது. கீழே காணும் படத்தில் இந்தப் பருத்திச் செடியின் ஒரு கிளையில் எவ்வளவு காய்கள் காய்த்துக் கிளையே வளைந்து தோன்றுகிறது என்பதை நன்கு காணலாம்.

இப்பருத்திச் செடிகள் நட்டு ஓராண்டில் ஒரு போகம்தான் மகசூல் எடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று வருடங்களுக்குமேல் ஐந்து வருடங்கள்வரை மகசூல் தந்துகொண்டிருக்குமெனத் தெரிகிறது.

சாதாரண கம்போடியாப் பருத்தி வேளாண்மை செய்தால் அதே ஆண்டில் வேறு பயிர்களும் செய்ய வசதியிருக்கிறது. இதில் அம்மாதிரி செய்வதற்கில்லை. அடுத்த ஆண்டுகளின் பலனையும் பார்த்துக் கணக்கிட்டு அனுபவ ரீதியில் ஆதாயமுள்ளதுதானா என்பதைப் பொருத்திருந்து விளக்க விரும்புகிறோம்.

புகையிலை - பக்குவ முறை

(ச. கு. கணபதி ஐயர்.)

★

புகையிலைக்கலையில் பயிர் முறையை விடப் பக்குவமுறைதான் நுட்பமானது. நல்ல முறையில் பக்குவப்படுத்தப்பட்ட இலைகளுக்கு விலை கூடிவரும். அவை வெறிதே வாயில் அடைத்துக்கொள்வதற்கோ, மூக்குப்பொடிக்கோ அல்லாமல் சிகரெட் செய்தல் முதலிய சிறந்த வேலைகளுக்குப் பயன்படக்கூடும். நம் குடியானவர்கள் புகையிலையை நன்றாகப் பக்குவப்படுத்துவதில்லை என்ற எண்ணம் எங்கும் பரவியுள்ளது. புகையிலை ஒரு காசுப்பயிர்; அதில் ஊதியம் எடுக்க வேண்டுமானால் உற்பத்தி செய்பவர் பக்குவ முறைகளை நன்றாக அறிந்திருக்க வேண்டும். கீழே தரப்படும் முறைகளின்படி ஒருவர் புகையிலையைப் பக்குவப்படுத்திக் கொள்ளலாம். இதில் பழக்கந்தான் முக்கியம். இரண்டொருதடவை பக்குவப்படுத்திப்பார்த்தால் விவரம் எளிதில் புலனாகும். பிறகு அனுபவம் தானாக வந்துவிடும் இதன் பொருட்டு ஒருவர் தம் நிலத்தில் இரண்டோர் அணைப்புக்களில் சிறிய அளவில் புகையிலையை உற்பத்திசெய்து பக்குவமுறைகளைப் பழகிக்கொண்டால் பிறகு பேரளவில் பயிர் செய்யலாம்.

1. அறுப்பு

புகையிலைச் செடியை அறுப்பதற்கு ஏற்ற நேரம் காலை 9-மணிக்கு மேல் 10½ மணிக்குள்ளாக இருக்கவேண்டும். ஏனென்றால் அறுப்பதற்கு முன் இரவில் இலைகளின் மீது படிந்திருக்கும் பனித்துளிகள் காய்ந்த பிறகே செடிகளைப் பறிக்கவேண்டும். இப்படிக் காய்வதற்கு அவகாசம கொடுத்து 9 மணிக்கு மேல்தான் அறுக்கவேண்டும். மகசூல் முழுவதையும் ஒரே நாளில் அறுவடை செய்து விடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. சிறுகச் சிறுக மேலே குறித்த மணிக்குள் இரண்டு மூன்று நாளுக்குள் தோட்டத்திலுள்ள முழுப்பயிரையும் அறுத்துவிடவேண்டும்.

அறுத்த செடிகளை இரண்டுமணி நேரம் வெயிலில் போட்டு வைத்திருந்து பிறகு எடுத்துச் செல்லவேண்டும். செடியில் கீழே உள்ள பெரிய இலைகளைத் தனியே களைந்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்று முன் கட்டுரையில் கூறினேம்; அவைகளைத் தனியே பக்குவபடுத்தி வேருக வைப்பது நல்லது. **"முதல் தரம்"** என்ற வரிசையில் சேர்க்க வேண்டியவை இவை.

வெயிலே இல்லாமல் வானம் மப்பு மந்தாரமாக இருந்தால் அன்று அறுக்காமல் இருப்பது நல்லது. தென்னாட்டில் அநேகமாக அறுவடைபருவத்தில் கர்ப்போட்ட மழைத் தூறல் சில பிரதேசங்களில் இருக்கலாம். அப்படிப்பட்ட இடங்களில் உள்ளவர்கள் வெயில் இருக்கும் நாள் பார்த்து அறுத்தல் அவசியம்.

குறிப்பு:- செடியை அறுக்கும்போது அடித்தண்டை நிலத்தில் இரண்டங்குலம் விட்டு அறுக்கும் முறை நல்லது, நம் குடியானவர்கள் இதனை அறிவார்கள். அறிந்துகொண்ட செடிகள்போக நிலத்தில் எஞ்சியிருக்கும் பாகங்களை நன்றாகக் காயும்படி சிலநாள் மண்ணிலேயே விட்டு வைத்து ஒரு மழை பெய்ததும் மடக்கி உழுது விடலாம். இப்படிச்செய்வதனால் நிலத்துக்குப் புகையிலை ஊட்டம் நல்ல எருவாகிறது. அந்த நிலத்தில் அடுத்த முறை பயிர் செய்யும் எந்தப் பயிரிலும் பூச்சி விழுவதில்லை. மடக்கியுழுவதற்கு மழை இல்லாத பட்சத்தில் வேருடன் அவைகளைப் பெயர்த்தெடுத்து நன்றாக உலர்த்தி ஈரமில்லாத இடங்களில் கோணிப் பைகளில் கட்டி வைத்துவிடலாம். **புகையிலை கஷாயம்** செய்ய இக்கழிவுகள் உபயோகப்படும். புகையிலைக் கஷாயம் என்பது **புழுக் கொல்லி** மருந்து வகைகளுள் ஒன்று. இக்கழிவுகளை ஒரு மட்பாண்டத்தில் போட்டு வேண்டிய அளவு ஜலம் சேர்த்துக் கொதிக்க வைத்து எடுத்துக் கொள்வதே புகையிலைக் கஷாயமாகும். கொதித்ததும் காம்பு வேர்

முதலியவை 10 மணி நேரம் நீரிலேயே இருக்கவேண்டும். பிறகு ஜலத்தை வடிக்கட்டி எடுத்துப் பீச்சாங்குழல் மூலம் பூச்சி பிடித்த எந்தச்செடிகளின் மீதும் தெளிக்கலாம். இக்கஷாயத்தின் வேகம் தாங்காமல் பூச்சிகள் இறந்து விடுகின்றன. பழச் செடிகளுக்கு இக்கஷாயம் அவசியமாகலாம்.

2. முதற் பக்குவம்

களத்திலே இரண்டு மணி வரையில் காய்ந்த செடிகளைக் குடிசைக்குள் எடுத்துச் சென்று அங்கே அவைகளை மூன்று நாள் வரையில் அடுக்கிவைக்கவேண்டும். அடுக்கின் நீளம் 4 அடியிருக்கலாம். உயரம் 2 அடி போதும். செடியின் காம்புகள் வெளியே தெரியும்படியும் இலை நரம்புகள் மேலே அமையும்படியும் இரண்டு வரிசைகளில் அவைகளை அடுக்கவேண்டும். அடுக்கும் போது இலைகள் சுருண்டுபோகாமல் கவனித்துக் கூடியவரையில் ஒவ்வொன்றும் விரிந்திருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். அடுக்கி முடிந்ததும் வைக்கோல் போட்டு அடுக்கி மூடிவிடுக. இந்த முறையினல் இலைகள் விரிவடைகின்றன. இயற்கையான காரச்சத்து இந்தச் சமயத்தில் தான் ஏற்படுகிறது. உஷ்ணம்படப்படச் சத்துக்கள் விருத்தியடைகின்றன.

3. கயிறுகளில் தொங்க விடுதல்

செடிகள் 3 நாள் அடுக்குகளில் முதற்பக்குவத்தைப் பெற்றபின் அவைகளைக்காற்ரோட்டமுள்ள தாழ்வாரங்களுக்கு எடுத்துச் சென்று சரம் சரமாகக் கயிறுகளில் கட்டித் தொங்கவிடவேண்டும். நம் நாட்டில் மரநிழலில் தொங்கவிட்டு மேலே தற்காலிகமான பந்தல் அமைப்பதுண்டு. செடிகள் இந்தச் சரங்களில் சுமார் 20 நாள் இருக்கவேண்டும். வெயில் படாமல் காற்றோட்டத்தினலேயே இலைகள் மெதுவாகக் காய்ந்து பொன்னிறம் பெறவேண்டும். பொன்நிறம்மாறிக் கறுப்பு நிறம் வரும்வரையில் விட்டுவைக்கக்கூடாது. பெருங்காற்றுச் சரங்களின்மேல் பட்டால் இலைகள் சேதமாகிவிடும். காற்றே இல்லாவிட்டால் அவை கெட்டுவிடும்; பதமாகமாட்டா. வெயில் மட்டும் படக்கூடாது. செடிகளை நெருக்கமாகத்தொங்கவிட்டால் இலைகள் கருத்துப்போகும். அதனல் இடை வெளி விட்டுத் தொங்க விடுவது முக்கியம். நம்மவர் இதனை அவ்வளவு முக்கியமாகக்கருதுவதில்லை. இந்த விஷயத்தில் கருத்தைச் செலுத்துவது அவசியம். இந்த நாட்களில் மழைகூடாது. பந்தல் மறைப்பு மழையைத் தடுக்கக்கூடுமா என்று கவனிக்கவேண்டும். தாழ்வாரத்தில் செடிகள் உலர்வதானல் மழைக்கு எவரும் அஞ்சவேண்டுவதில்லை. தழைகள் பொன்னிறம் பெறுவதற்கு இரவிலே அடிக்கும் குளிர்காற்றும் பகலில் வீசும் உஷ்ணக்காற்றும் காரணமாகின்றன. உஷ்ணக்காற்று மிகவும் வறட்சியுள்ளதாக இருக்கக்கூடாது. அதன் பொருட்டுத் தரையில் மணலைப்பரப்பிவைத்துப் பகல் 10 மணி சுமாருக்கு அந்த மணலில் ஜலம் தெளித்து வைத்தால் காற்றின் வறட்சி குறையும். இதனை நாம் அனுசரிப்பதில்லை; ஆனல் இது முக்கியமாகக்கவனிக்கத்தக்க விஷயம்.

4. பாடம் வைத்தல்

பாடம் வைத்தல் என்ற பெயர் சில இடங்களுக்குப்புதிதாக இருக்கலாம். ஆனல் எங்கும் கையாளப்படும் முறை ஒன்றே. சரங்களில் தொங்கவிட்டிருக்கும் செடிகள் சுமார் 20 நாளில் பொன்னிறம் பெற்றுவிடும். பெற்றபிறகு அவற்றை மெதுவாகத் தனித்தனியே எடுத்துக் குடிசைக்குக் கொண்டு போய் முன்பு முதற்பக்குவத்துக்காக அடுக்கியமாதிரி 2 அடி உயரம் அடுக்கி, அடுக்கின் மேல் தென்னங்கீற்றைப் போட்டுப் பளுவான சாமானை அழுத்தத்தின் பொருட்டு அதன்மேல் வைத்துவிடவேண்டும். அழுத்தம் மிகவும் முக்கியம். சரங்களிலிருந்து எடுக்கும் நேரம் காலை 7 மணிக்குமுன்னதாக இருந்தால் இலைகள் மிருதுவாக இருக்கும், அதனல் அவை ஒடிந்துபோய் நஷ்டம் ஏற்படுவதில்லை. இலைகளை இங்ஙனம் வைத்து அழுத்தத்தை உபயோகிப்பதையே நாம் பாடம் வைத்தல் என்கிறோம்.

மூன்று நாள் கழித்து அடுக்கை மெதுவாகக் கலைத்துச் செடிகளை எடுத்து அவற்றிலுள்ள இலைகளை நிதானமாகத் தனித்தனியே எடுத்துவிடவேண்டும், இப்பொழுது இலைகள் சுருண்டு போயிருக்கும். சுருள் அழகாக இருக்கவேண்டும். இலைச்சுருளுக்கு ஒரு நெகிழ்ச்சி அமைந்திருப்பது நல்ல தன்மையின் அடையாளம். நெகிழ்ச்சி (Elasticity) இல்லாத இலைகளும் மடமடப்பாக உள்ளவையும் இரண்டாந்தரம் மூன்றாந்தரமானவை.

(22-ம் பக்கம் பார்க்கவும்.)

ஈரோடு தாலுக்கா விவசாயிகள் சங்கக் கூட்டத்தின் தீர்மானங்கள்.

1 தாலுக்கா சங்கத்திற்கு அடியில் கண்ட நிர்வாகஸ்தர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

டாக்டர். ல. கி. முத்துச்சாமி
தலைவர்.

ரா. கி. வெங்கிடுசாமி
பா. ரா. கந்தசாமி } காரியதரிசிகள்.

வி. எஸ். ராமலிங்க கவுண்டர்
உபதலைவர்.

மேலும் 21 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

2 தற்போது அமுலிலுள்ள லெவி முறைத்திட்டத்தில் 1 ஏக்கர்வரை விஸ்தீரணமுள்ள நிலங்களுக்கு விதி விலக்குவேண்டும்.

3 7 மணங்குக்குக்கீழ்பட்ட விளைச்சலுள்ள நிலங்களுக்கு கொள்முதல் கூடாது.

4 தற்போதுள்ள ஸ்கேலில் 2 to 5 ஏக்கர் என்றிக்கும் காலத்தை, 2 to 3; 3 to 5 என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

5 சென்ற போகங்களில் சர்க்காருக்கு டிமாண்ட்படி நெல் அளக்கவில்லையென பல விவசாயிகள் பேரில் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது. அம்மாதிரி கேஸில் பாதிக்கப்பட்டவர்கள் சென்ற போகம் அளக்கவேண்டிய நெல்லை தற்போது அமுலிலுள்ள லெவி திட்டப்படி அந்தந்த இடங்களிலுள்ள ஸ்கேல்படி நெல் அளந்தால் அவர்கள் பேரிலுள்ள கேசுகளை சர்க்கார் வாபீஸ் பெற்றுக் கொள்ளவேண்டும்.

6 தோட்டக்கால் பூமிகளில் சாகுபடி செய்திருக்கும் நெல்லுக்கு சாகுபடிதாரனிடம் அவன் பயிர் செய்திருக்கும் விஸ்தீரணத்தை யொட்டி ஸ்கேலில் பாதி விகிதாச்சாரம் வசூலிக்கவேண்டும்.

7 காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் சுமார் 2000 ஏக்கர்வரை 3-வது போகம் நெல் சாகுபடி செய்திருப்பதால் ஷை பயிருக்கு ஏப்ரல் 30-ந் தேதி வரை தண்ணீர் வேண்டியிருக்கிறது ஆகையால் ஏப்ரல் 15-ந் தேதி மூடும் வாய்க்கால்களில் 30 தேதி வரை தண்ணீர் விடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8 தாலூக்கா விவசாய ஆபீசுக்கு அவ்வப்போது வரும் பட்டா, உரம், விதை மற்றுமுள்ள விவசாயக்கருவிகளின் விபரத்தை உடனுக்குடன் தாலூக்கா விவசாய சங்கத்திற்கு தெரியப்படுத்தகோறுகிறது.

9 உணவு தானியத்திற்கு உபயோகப்படும் உரம்வகைகளை பழையபடி பாதி விலைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

10 ஈரோடு தாலூக்கா விவசாயிகள் மகாநாட்டை மே மாதம் கடைசிவாரத்தில் ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

பா. ரா. கந்தசாமி
காரியதரிசி.

மண் வள ஆராய்ச்சி

(21-ம் பக்கத்தொடர்ச்சி)

யமான தாகையால் லேடிபால்வர்தான் எழுதியுள்ள புத்தகத்தில் பாமரனும் எளிதில் புரிந்து கொள்ளும்படி உலகத்தில் எல்லா பாகங்களிலிருந்து விஷயங்களை சேகரம் செய்து தக்க உதாரணம்காட்டி விரிவாக விஷயங்களை விளக்கி கூறியுள்ளார். இதனுல் அவர் உலகத்திற்கு ஒரு பெரிய நன்மை செய்தவராவர். மேற்படி புத்தகம் முதன் முறையாக 1943ம் ஆண்டில் பிரசுரமாகி வெளிவந்தது. அதற்கு பிறகு எட்டு தடவை பிரசுரிக்கப்பட்டும் தற்சமயம் வெளிவந்துள்ள புத்தகத்தில் இன்னும் சில விரிவான விஷயங்கள் சேர்க்கப்பட்டும், குறிப்பாக அமெரிக்க வாசகர்களுக்கு என்று வெளியிட்டுள்ள சாரம்சங்களிலிருந்து இப்புத்தகத்தில் கூறியுள்ள விஷயங்களின் உண்மையைக் கொண்டு நாம் எடுத்துக் கொண்டுள்ள பிரச்னை எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பது புலனுகும்,

இங்கிலாந்தில் பிரபலமான பெரிய ஆராய்ச்சி சாலையின் செயலாளராக பணியாற்றிவரும் லேடிபால்வர் பிரச்னை தீர நமக்கு புலப்படாத சில ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டு வருகிறுர் தற்சமயம் இவர்வெளியிட்டுள்ள புத்தகத்திலிருந்து ஆராய்ச்சியாளர்களும் தெரிந்துகொள்ளவேண்டிய நுட்பமான விஷயங்களும், சிக்கலான பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் உதவிபுரிவதாக இருக்கிறது. தவிரவும் நல்லசத்துள்ள உணவுகளைப்பெற்று உலகில் ஜன சமூகம் அழிந்து போகாமல் பாதுகாக்கவும் சரித்திரத்தில் மனித சமூகம் இடம்பெறவும் மிகவும் உதவி புரிவதாக இருக்கிறது.

இரு பணிகள்

ஏர்க்கிழார்

மனித வாழ்விற்குறிய தேவைகள் பலவற்றுள் உணவே பிரதானமானது. அதனைப்பெருவது விவசாயத்தால். எனவே விவசாயமே மனி வாழ்வின் ஜீவாதாரத் தேவையினை நல்கும் நற்றொழில், இத்தொழிலை முன்னுக்கு கொண்டுவராத எந்த தேசமும் வறுமை எனும் படுகுழியில் விழவேண்டியதே என்ற இம்மாபெரும் உண்மையை உணர்ந்த ருஷ்ய அறிஞர் லியோ டால்ஸ்டாய் எனும் பெரியார், கலை, சாஸ்திரம்; சமூக சேவை எனப்பல பேசி அதற்கென தம்வாழ்நாட்களைச்செலவிடும் மக்களை விளித்து விளம்பினார், நண்பர்களே, கலையைப்பரப்ப கடுமையான உழைப்பை மேற்கொள்கிறீர். அது உங்களை, களைப்பை மறக்குமாறு மயக்கலாம் களைப்புக்குக்காரணமான பசியினைப் போக்கிவிடல் சாத்தியமா? சாத்திரம்பல சமைப்பீர் - சாதமின்றி வாழல் சாத்தியமா? எனவே கலையும் சாஸ்திரமும் மனிதவாழ்வின் இன்பத்திற்கு வேண்டியவையாகலாம் எனினும் வாழ்விற்கு அத்யாவசியமான உணவினை ஈந்து ஊட்டத்தையீயும் ஒரு சக்தி அதற்குகிடையாதே. அதனால் உணவுண்ணும் ஒவ்வொருவரும் உழவினைச் செய்யக்கடவர். உழவிற்கு உதவக்கடமைப்படக் கடவர்'' என்றார் அவ்வான்றோர்.

அறிஞர் அவ்வாறு கூறினார், ஆனால் நம் நாட்டில் காண்பதென்ன? உழவுத்தொழில் உயர்வுக்கு உற்ற முயற்சியினை எவர் முனைந்து செய்கிறார்கள்? செய்யும் உழவர்க்கு உதவும் மக்கள் யார்? நாட்டைக்காக்கும் நாடாள்வாரெனப்பட்டார் தாம் இத்தொழில் வளர்ச்சிக்குப்பூரண உதவி செய்கின்றனரா, இல்லை!

நாட்டிலே உணவுப்பஞ்சம், அதனால் மக்கள் வாழ்வு மங்குகிறது. பெயரளவிலே சிறு சிறு உதவிகளை நல்கும் நாடாள்வார் பெரும் உதவியினை உழவனிடமிருந்து வற்புறுத்துகின்றனர். கட்டுபடியாகாத உழவு தொழிலோடு ஒட்டிக் கொண்டிருக்கும் விவசாயப் பெருமக்கள் தம் தொழிலுக்கு அரசியலாரும் இதரரும் தரும் தொல்லையை உத்தேசித்து தம் தொழிலுக்கே ஒரு தலை முழுக்கு போடக்கூட முனைந்துவிட்டார்களென்றால் ஜீவாதாரத் தொழிலுக்கு இந்த நாட்டில் எவ்வளவு பெரும் உதவி தரப்படுகிறது என எண்ணிப்பாருங்கள்!

முன்னைய நாளிலே உழவுத் தொழிலின் சிறப்பினை ஓர்ந்து தேர்ந்திருந்தனர். அரசியலார், அதனாலே வேதியர், வைசியர் போன்றவரைவிட நாடாளும பணிக்கு உழவரையே துணைவராகக் கொண்டனர் என்பது பழங்கால தமிழர் வழக்கமாயிருந்தது. உழவுதொழில் உயர்வே ஒரு நாட்டின் உயர்வு. அதை ஓங்கச்செய்யும் நுண்ணறிவு உழவர்க்கே உண்டு எனும் கருத்தாலேயே அவர்கள் உழவர்களை அமைச்சராகத்தேர்ந்தனர். அதனால் உழவுத்தொழில் ஓங்கிற்று எழவு பஞ்சம் எங்கோ பறந்தது.

பண்டைய நாளில் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் போது உழவர்களுக்கே முதலிடம் கொடுத்தார்கள் என்பதற்குக் கீழ்க்கண்ட செய்யுள் சான்றுபகரும்.

நூலேனிலோ கோல்சாயும் நுந்தமரேல் —
வேஞ்சமராம்
கோலேனிலோ வாங்கே குடிசாய்க்கும் —
நாலாவான்
மந்திரியுமாவான் வழிக்குத்துணையாவான்
அந்த வரசே யரசு.

நூல் - அந்தணர், கோல் - செங்கோல், நுந்தமர் - அரசர், கோல் - வணிகர், நாலாவான் - வேளாளன்)

இன்றும் மேலை நாட்டினர் பலதுறைகளிலே கவனம் செலுத்துகின்றனர். வியாபாரத்திலோ, நாடு பிடிப்பதிலோ; நாசகாரக் கருவிகண்டுபிடிப்பதிலோ போட்டி போடுவதில் கவனம் செலுத்தும் அவர்கள் தங்கள் நாட்டின் விவசாய விருத்தியில் விசேஷ கருத்துள்ளவர்களாய் உள்ளார்கள், என்பதில் சந்தேகமில்லை.

இயற்கையிலேயே நம் நாட்டைப் போல விவசாயத்திற்கு ஏற்ற வெட்ப தட்பநிலையோ மண்வளமோ, நீர்ப்பாசன வசதியோ இல்லாத எத்தனையோ மேனாடுகள் இயற்கையின் இடையூறுகளை எதிர்த்து இந்த விவசாயத்தில் வெற்றிகாண பல விஞ்ஞான கருவிகள், பொறிகள் கண்டுபிடித்து வெற்றியும் அடைந்துவிடுகிறார்கள் இதற்கெல்லாம் அந்நாட்டு அரசியலார் உதவி அபரிமிதமாக இருக்கிறது என்பதை கவனிக்கவேண்டும்.

அந்நாட்டில் உழவு செய்தொழில் மக்கள் வாழ்வின் வளம் உயர ஏற்ற திட்டம் அந்நாட்டிலே உண்டு. ஆனால், இந்த நாட்டில் அவர்கள் வாழ்வு அவல வாழ்வுக்குரிய திட்டம் உண்டு என்றால் யாரும் இல்லை என்று கூறமுடியாது.

மேனாடுகளிலே அரசியலார் விவசாயப் பண்ணைகள் பல ஏற்படுத்தி விவசாய விருத்திக்கு ஆராய்ச்சி பல செய்கின்றனர். அந்த ஆராய்ச்சிக்குழுவுக்கும், சாதாரண விவசாயிகளுக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது எனவே கண்டு பிடிக்கப்படும் விவசாய நுணுக்கங்கள் விரைவில் விவசாயிகளின் உழவு தொழிலில் உபயோகிக்கப்பட்டு மிகுந்த பலனைப் பெற ஏதுவாயுள்ளது ஆனால் இங்கே?

விவசாயிகளே! கிராமவாசிகள் எழுத்தறிவற்ற தற்குறிகள். வாழ்விலே அடிபட்ட பஞ்சைகள். இவர்களை மதித்து அவர்கள் தொழிலுக்கு ஊக்கமூட்டும் உத்தம உத்தியோகஸ்தர் உண்டா? விவசாயமக்களில் சிலர் - தொழில் அனுபவமும் கல்வி ஞானமும் பெற்ற சிலர் விவசாய விருத்திக்கு தங்கள் திட்டத்தை அரசியலாருக்கு அனுப்பப்படின் அதை ஆதரித்து மேற்கொள்ள ஆர்வமுள்ள அமைச்சருண்டா?

உண்டு உத்தியோகஸ்தர்களும், உயர்ந்த சம்பளத்தில்! அமைச்சரும் உண்டு அதிக சம்பளத்தில்! ஆனால் அவர்களுக்கும் அந்த பஞ்சை விவசாயிகளுக்கும் இடையே உள்ள தூரம் அதிகமாயுள்ளது இந்த வறுமை மக்களின் தாழ்ந்த குரல் உயர்ந்த அம்மக்கள் காதுக்கெட்டுவதில்லை எட்டினும் ஏற்றுக்கொள்ள அவர்கள் அந்தஸ்து அனுமதிப்பதில்லை. மேனாட்டினரின் மனதிலே ஒரு சுதந்திர உணர்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் நெடு நாட்களாக அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த தொரு காரணத்தாலோ என்னவோ இங்குள்ள படித்த பட்டதாரிகளிடம் கூட அந்த அடிமை மனப்பான்மையே உச்சஸ்தாயியில் இருக்கிறது. அதுவே அவர்களுக்கு அந்தஸ்து அளிப்பதாயும் நாகரீகப் போக்கெனவும் நினைக்கிறார்கள்.

மேனாட்டு வாலிபர் ஒருவர் ஒரு தொழிற் பயிற்சிபெறுகிறார் என்றால் அப்பயிற்சியினை தானாக ஆரம்பித்த தொழிற் கூடத்திலே சிறக்குமாறு செய்யவே சிந்திப்பார். ஆனால் நம் நாட்டு வாலிப மணிகள் அதை பிறர் அதுவும் அரசியலார் தொழிற்சாலையில் அடகுவைக்கவே ஆசைப்படுவார். தாம் பெற்ற விவசாய அறிவை தானாக தன்னிலத்திலோ, பிற நிலத்தை குத்தகைக்கேற்று அதிலே செலுத்தி பயன் விளைவிக்கும் சுயோட்சை உணர்வு உதிப்பதில்லை. அவ்வாறு செய்வது அந்தஸ்து குறைவு என்ற எண்ணம் ஏற்படுகிறது. அவர்களுக்கு இத்தகைய பல காரணங்களே நம் நாட்டு விவசாயத்தொழில் வீழ்ச்சிக்கு மூலமாயின. எனவே விவசாயப் பெருமக்களே! விழித்திருங்கள்!. உங்கள் தொழில் உத்தமமானது-உபகாரமானது. அதனை வளர்க்க அரசியலார் முனையவேண்டும். அதற்கு நம்மவர் அதில் அங்கம் வகிக்கவேண்டும். அதற்கு பூரண ஏற்பாடுகள் நீங்கள் செய்யவேண்டும். விவசாய விஞ்ஞானத்தை அறிய உங்கள் மக்களை கஷ்டப்பட்டாயினும் விவசாயக்கல்லூரிக்கு அனுப்பவேண்டும். அவர்கள் சேமிக்கும் அந்த அறிவை அரசியலார்க்கு அடகுவைத்து அரை வயிற்றுச்சம்பளம் பெறும் அவமானத்திற்கு அவர்களை ஆளாக்காது சுயேட்சையாக சொந்த தொழிலாக விவசாயத்தை மேற்கொள்ளத்தூண்டவேண்டும். இந்த இரு பணிகளையாவது இன்று கடை பிடியுங்கள். பிறமுறைகளை பின்னர் ஆராய்வோம்.

வாழ்க விவசாயம்!

உழவர் பெருமக்களே!

உங்களுடைய உயரிய விவசாய அனுபவங்களை உழவன் மூலம் வெளியிட உதவுங்கள்.

சென்னை மாகாணத்தில் குளத்துப் பாசனமும் உணவு உற்பத்தியும்

(சென்னை மாஜி பிரதமர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார்)

(முன் இதழின் தொடர்ச்சி)

1852-ம் வருஷத்தில் பப்ளிக் வொர்க்ஸ் கமிஷன், சர் ஆர்தர் காட்டன் கூறியுள்ள யோசனைகளையே பின்பற்றி அறிக்கைகளை வெளியிட்டன. இருந்தபோதிலும் குளங்களின் பராமரிப்புக்கு உருவான ஒரு திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. 1880-ம் ஆண்டில் கூடிய பஞ்ச நிவாரண கமிஷன், குளங்களை துரிதமாக புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியது மேலும் இக்குளங்களை பராமரிப்பு செய்வதின் மூலம் விவசாயிகளின் நலத்தில் ஒரு முக்கிய பங்கெடுத்து பஞ்சகாலத்தில் எவ்வாறு மனிதனின் உயிர் உடமைகளைக்காப்பாற்றி கால் நடைகளின் வளர்ப்புக்கும் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும் என்பதைப்பற்றி விவரித்தன.

குளங்களின் வருமானத்தை வேறு செலவுகளுக்கு எடுத்துக்கொள்ளுதல்:-

முன்னே கூறியபடி நம்மாகாணத்தில் ரயத்துவாரி பிரதேசங்களிலுள்ள 27000 குளங்களிலிருந்து கிடைக்கும் நீர்பாசன வருமானத்தை அதாவது 95 லட்சரூபாய் வருஷ வருமானத்தில் 25 லட்சரூபாய் கூட மேற்கூறிய பராமரிப்புகளுக்காக செலவு செய்யப்படுவதில்லை. மீதியுள்ள 75 லட்சம் ரூபாய் பொது நிர்வாகத்தின் இனங்களில் வரவு வைத்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு நீர்பாசன வருமானத்தை இதர செலவினங்களில் எடுத்துக்கொண்டு குளங்களை கவனிப்பாரற்று வண்டல் நிறம்பும்படி நேர்ந்தது பற்றி எவராலும் நியாயமற்ற செய்கை என்பதை மறுத்துக்கூற முடியாத விஷயமாகும் இக்குளங்கள் ஏற்பட்டதில் நம் சர்க்காருக்கு சிறிதேனும் செலவு என்பதே கிடையாது. நம் மூதாதையர்கள் நமக்கு விட்டுவைத்துப் போன விலையில்லா பொக்கிஷம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இதர மேட்டூர் அணை, காவிரியிலுள்ள பெரிய அணைக்கட்டு, கோதாவரி, கிருஷ்ணா போன்ற நீர்த்தேக்கங்களுக்கு செலவு செய்ய மாகாண சர்க்காரின் பொது நிதியிலிருந்தும் மற்றும் பொது ஜனங்களிடமிருந்தும் கடன் வாங்கிய பணத்தைக்கொண்டு பெரிய தேக்கங்களை ஏற்படுத்தினர்கள், ஆனல் குளங்கள் தோன்றிய விஷயம் வேறு. வாங்கினகடனைத் திருப்பி கொடுப்பதற்கும் அதன் வட்டி முதலான செலவு துகைகளை சமாளிக்க சர்க்கார் மேற்கூறிய நீர்த்தேக்கத்தின் உதவிபெற்று சாகுபடி செய்யும் பிரதேச வாசிகளிடையே மட்டும் ஸ்பெஷல் லெவி முறையை கையாண்டால் மிகவும் நலமாயிருக்கும் ஆனல் சிறிதும் செலவு ஏற்படாமல் தோன்றிய குளங்களின் மூலமாய் கிடைக்கும் நீர்ப்பாசன வருமானத்தை வேறு காரியங்களுக்கு செலவிடுதல் ஒழுங்கா என்பதே கேள்வி. அநேக கோடி ரூபாய் முதலீடு செய்து சர்க்கார் எதிர்பார்த்த லாபத்திற்கு குறைவாக வருமானம் கிடைப்பது வருந்தத்தக்கது. சர்க்கார் மேற்கூறிய குளங்களை பாதுகாப்பதில் நோக்கம் உள்ளவர்களாயிருப்பின் அதிக பட்ச லாப நஷ்டங்களை கருதாமல் பராமரிப்பு செய்ய வேண்டும்.

நிலையில்லாத வருமானம்

வரம்பு கடந்த வரிவிதிப்பினலும், செலவு ஏற்படுவதாலும் இருசாரார்களுடைய மனத்தாங்கல் ஏற்படுவது சகஜமே இது ஒரு சங்கடமான விஷயமாகும். ஸ்திரமற்ற வரம்பு மீறிய வரிவிதிப்பினல் ரிஜிஸ்தரான ஆயக்கட்டுகளின் நீர்ப்பாசனம் வரம்புகடந்து எல்லையை மீறுவதால் இன்றைய நிலை சற்றும் எதிர்பாரத ஸ்திரமற்ற முறையில் பாசனம் நடைபெறுகிறது. நான் எனக்குத் தெரிந்த ஒரு உதாரணம கீழே தருகிறேன். 1890-ம் வருஷத்தில் வெளிவந்த செட்டில்மெண்ட் அறிக்கைப்படி தென் ஆற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூக்காவிலுள்ள கிழியனூர் கிராமத்தில் உள்ள பெரிய குளத்தின் ஆயகட் 208 ஏக்ராவாகும் அடுத்து

வெளியிட்ட அதே செட்டில்மெண்ட் அறிக்கையானது ஆயகட் 243.23 ஏக்ரா என்று கண்டுள்ளது. இவ்விரண்டு அறிக்கை வெளிவந்துள்ள இடைக்காலத்தில் களியங்குலா தண்ணீர்மட்டம் 2½ அடி குறைந்தது. இதனால் நான்குமாத காலத்திற்கு போதிய தேக்கம் வசதியுள்ள குளம் இரண்டு மாதகாலத்திற்குத்தான் தண்ணீர் சப்ளைசெய்யமுடிந்தது. எதிர்பாராத பருவமழையினால் திடீரென்று சில சமயங்களில் குளத்தில் தண்ணீர் வந்து சேருகிறது. இக்குறைபாட்டினால் ஆயக்கட்டுகளில் தண்ணீர்வந்து ஏறி பயிர்களுக்கு தேவையான ஐந்துமாதகால தண்ணீர்ப்பாசனத்தை இரண்டுமாத காலத்தில் நிரப்பிவிடுகிறது. பெருத்தமழைகாலங்களில் குளம் தண்ணீர் கொள்ள வசதியற்று கரைபுரண்டோடும் தண்ணீர் சமுத்திரத்தில் வீணாகப்போய்ச்சேருகிறது. களிங்குலா குளத்தின் கரையோரங்களை ஐந்துமாத காலத்திற்கு போதுமான தண்ணீர் தேங்கும்படி செய்ய சர்க்கார் வசதிகளை செய்திருந்திருக்கலாம் ஆனால் நடைமுறையில் இதுவரை ஒரு ஏற்பாட்டையும் காணோம் வெள்ளாமை குறைந்து கொண்டேதான் போகிறது, விவசாயிகள் வீண் கடன்பளுவை ஏற்று சாகுபடிக்கு போட்ட முதலீடு கூட செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்,

ஒருமுடிவான வரி விதிப்பு கொள்கையை அமுல் நடத்தாத காரணத்தால் பெரிய ஆயக்கட்டுகள் ரிஜிஸ்தர் ஆவதன் மூலம் மற்றும் குளங்களில் மணல் தட்டிவிடுவதாலும் இருவழிகளிலும் விவசாயத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டு முன்னேற வகையில்லாமல் தவிக்கின்றன.

மாரமத்து இலாகாவின் அலுவல்கள்

இப்பொழுது மாமத்து இலாகா மேற்கொண்டுள்ள அலுவல்கள் எவ்வாறு என்பதைப் பற்றி சற்றே தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். சாதாரணமாக பயிர் காலங்களுக்கு மூன்று முறை குளத்தில் தண்ணீர் நிரம்பினால் போதுமானது என்ற மனப்பான்மையில் இலாகா வேலை செய்கிறது பருவமழை மாறிப்போகும் இந்நாட்களில் குளத்தில் ஒரு முறையாவது தண்ணீர் நிரம்பியிருக்குமா என்று திடமாக சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை. அடுத்தபடியாக குளத்தின் தண்ணீர் மட்டம் ஒரு அடி உயர்த்தினால் அதற்கு கணிசமான முறையில் ஆயக்கட்டுகளின் விஸ்தரிப்பு ஏற்படுத்த முயலுகிறார்கள். இது நிலைமையை சரிவர புரிந்து கொள்ளாமல் நடக்கும் பெருந்தவறாகும். தவிர பொதுஜனங்களின் மதிப்பும் இழந்து விடுகிறார்கள். ஏனென்றால் தற்போதிருக்கும் ஆயகட்டுகளின் விஸ்தரிப்பு களிங்குலா குளத்தின் தண்ணீர் தேக்கத்திற்கு போதுமானதா என்பதை கவனியாமல் அதிகப்படியாக விஸ்தரிப்பு ஏற்படுத்த முயலுவது வீண் பிரமையாகும். இவ்வித நிலைமை எவ்வாறு எழுந்தது என்பதற்கு கீழே கூறியுள்ள இரண்டு உதாரணங்களிலிருந்து விளங்கும் தென் ஆற்காடு ஜில்லா, அன்பாக்கம் (R. S. No 200) ல் உள்ள ஒரு குளத்திற்கு 287 ஏக்கரா 30 சென்ட்களுக்கு ஆயக்கட்டு இருக்கிறது. தற்போது அந்த குளத்தின் மட்டத்தை ஒரு அடி உயர்த்தி அதிகப்படியாக இன்னும் 200 ஏக்ராகளுக்கு ஆயக்கட்டு விஸ்தரிப்பு ஏற்படுத்துமாறு யோசனை கொண்டுள்ளார்கள். இது மாதிரியாகவே மற்றும் ஒரு அதே ஜில்லாவைச் சார்ந்த குஞ்சி மங்கலம் என்னும் இடத்தில் உள்ள 194 ஏக்ரா 88 சென்ட் கொண்டுள்ள ஆயக்கட்டின் விஸ்தரிப்பு எவ்வாறு ஏற்படுத்த எத்தனித்திருக்கிறார்கள் என்பதை கூறுகிறேன். சாதரணமாக 90 ஏக்ரா நிலத்திற்கு இரண்டு மாத காலங்களுக்கு போதிய நீர்பாசனத்திற்கு தேக்கம் வசதி கொண்டுள்ள நான்காவது ரகத்தைச் சேர்ந்த இக்குளத்தை 1½ அடி அதிகமாக உயர்த்தி அதன் மூலம் மற்றும் 200 ஏக்ராகளுக்கு ஆயக்கட் ஏற்படுத்த திட்டம் அமுலாயிருக்கிறது தெரியவரும். மேற்கூறியவைபோன்ற திட்டங்களை உருவாக்கி அமுலுக்கு கொண்டுவருவதினால் சர்க்காருக்கு ஒரு வேளை ரயத்துகளிடமிருந்து போதிய வருமானம் கிடைக்கலாம். ஆனால் ஐந்துமாத காலப்பயிர்களுக்கு தேவையான தண்ணீர் வசதி கிடைக்குமா என்பதை உறுதியாகச்சொல்ல முடியாது. இவ்விதமாக ஆயக்கட் விஸ்தரிப்பு திட்டங்களை சரிவர யோசனை செய்யாமலும் அதிகப்படியான கணக்கு மதிப்பீடுகளினாலும் காலாகாலங்களில் தேவையான தண்ணீர்வசதி குளங்களில் இல்லாமற்போய் பயிர்கள் அறுவடை குறைவாகவும் மற்றும் முதலீட்டு துகையை ஈடு செய்ய முடியாமற் போய் விவசாயிகளுக்கு மாபெரும் நஷ்டங்களும் மேலே சொன்ன முறைகளை அமுல் நடத்துவதினால் விளைகிறது. இதனால்விவசாயிகளின் நலன்கள் ஓரளவு பாதிக்

கப்பட்டு இதர பற்றுக்குறை, தண்ணீர் பஞ்சங்களினால் கிராமங்களில் வீண் சச்சரவு மனஸ்தாபம், சண்டை, பூசல்கள் முதலியன கிளப்பிவிட ஏதுவாகிறது.

தவிரவும் வண்டல் மண்களை அகற்றுவதிலுள்ள தடைகளும் அதற்காக வேண்டி எழுத்து மூலமாய் உத்திரவு பெறுவதும் முதலிய சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறது. விவசாயி வண்டல் மண்ணை விவசாய காரியத்திற்கே உபயோகப்படுத்துவதாக உத்திரவு வாங்க வேண்டும் இல்லையேல் அபராதம் விதிக்கப்படுகிறது.

குளங்களை புனர் நிர்மாணம் செய்வது சர்க்காரின் கடமையாகும்

உணவு உற்பத்தி பெருக்கு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மட்டுமின்றி குளங்களை சரியான முறையில் மேற்பார்வையிட்டு வைத்துக் கொண்டிருக்க வேண்டியதின் அவசியத்தை எவராலும் மறுத்துக் கூற முடியாது. சர் ஆர்தர்காட்டன் நூறு வருஷங்களுக்குமுன்னால் இதையேதான் குறித்துச் சொன்னார், அதைத்தழுவியே பப்ளிக்வொர்க்ஸ் கமிஷன் அறிக்கைவெளிவந்தது. எழுபது வருஷங்களுக்குமுன்னால் பஞ்ச நிவாரண கமிஷன் அறிக்கையும் மேலே சொன்னதின் முக்கியத்வத்தைபலமாக ஆதரித்து வந்தது. இவ்வாறு எல்லாம் இருந்தும்கூட இதுவரையிலும் காரியத்தில் ஒரு திட்டமும் நிலையான உருவத்தில் இல்லை என்று கூறுவது மிகவும் விசனிக்கத்தக்கதாகும். நாம் சுதந்திரம் அடைந்தபின்னராவது இத்திட்டங்களை உருவாக்குவது நமது விசேஷப் பொருப்புவாய்ந்த கடமையாகும். நமது பிறப்புரிமையின் கடமைகளை பிறழவிட்டதால் பஞ்சத்தின் கொடுமையினால் கடமையை நிறைவேற்ற முற்படவேண்டியிருக்கிறது. நான் மகாணத்திலுள்ள எல்லா ஏரி, குளம் முதலியவைகளை பழுதுபார்க்கவும், புனர் நிர்மாணம் செய்யவேண்டியும் 19 கோடிரூபாய் செலவில் எட்டுவருஷகாலத்தில் முடிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்தேன். அதன் பாதி செலவை மத்தியசர்க்கார் ஏற்கும்படி. கேட்டுக்கொண்டேன் அதன்பலனாக 1949-50-ம் வருஷத்திய மாகாண பட்ஜெட்டில் இதற்கான செலவிற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண சர்க்காரின் கூட்டு பிரதிநிதிகளடங்கிய மகா நாட்டில் இந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 12 கோடி ரூபாய் செலவிற்கதிகப்படாமல் ஐந்து அல்லது ஆறு வருடகாலத்தில் வேலைகளை நடத்த முடிவிற்கு வந்துள்ளார்கள் என்று தெரியவருகிறது. இத்திட்டத்தை குறைந்தகாலத்தில், குறைந்தசெலவில் முடிப்பதானால் உண்மையிலேயே நாம் சர்க்காரை போற்றக்கடமைபட்டுள்ளோம், ஆனால் இதிலிருந்து அதிகப்படியாக எதிர்பார்க்கும் உணவுதானியங்கள் $1\frac{1}{2}$ லட்சம் டன் தான். இத்திருந்திய திட்டம் ஒரு அடிப்படையான ஆதாரக்கணக்கைக் கொண்டு ஏற்பட்டதல்ல ஏதோ திட்டத்தின் துகையை குறைத்துவிடவேண்டி செய்யப்பட்டது. ஆனால் நான் வகுத்த திட்டம் அப்படியில்லாமல் தகுந்த ஆதார அடிப்படைகளின் ருசு கொண்டு கணக்கு மதிப்பிடப்பட்டது. அவற்றை கீழே கூறியுள்ளவற்றிலிருந்து தெரியவரும்.

ஐந்து ரக திட்டங்கள்

ரயத்துவாரி பிரதேசங்களிலுள்ள 27000 குளங்களில் சுமார் 2000-திற்கு ஒவ்வொன்றுக்கும் 200-ம் அதற்கு மேலும் ஆயக்கட்டுகள் உள்ளன. இவைகள் கடந்த எழுபது வருஷகாலமாக மராமத்து இலாகாவின் அதிகாரத்துக்குட்பட்டும் மற்றவைகள் ரெவினியு இலாகாவின் மேற்பார்வையிலும் இருந்து வருகின்றன. சமீபத்தில் ஏற்பட்ட விசேஷஸ்தாபனத்தின் உதவியால் மராமத்து இலாகாவின் மேற்பார்வையிலுள்ள அநேக குளங்கள் ஒருவேளை நல்ல முறையில் பராமரிப்பு செய்யப்பட்டிருக்கலாம் ஆனாலும் பொதுப்படையாக சொல்லுமிடத்து எல்லாவற்றையும் சிறந்த முறையில் சீர்திருத்த வேண்டியது அவசியமாகும். தற்போது முக்கியமாக செய்யவேண்டிய வேலை குளங்களின் தண்ணீர்த் தேக்கத்திற்கு போதிய வசதி செய்வதே இதற்காக குளங்களின் வண்டல் மண்களை அகற்றி ஆழமாக செய்வது என்றால் அதிகப்படி பணச்செலவும் அந்த வண்டல் மண்களை அப்புறப்படுத்தச்செய்வதில் சிறிது பாகம் கரையோரங்களை உயரப்படுத்துவதில் உபயோகிக்கப்பட்டு மற்றவைகளை நீக்குவது பெரிய பிரச்சனையாகிவிடும். ஆகையால் தற்சமயம் முக்கியமாக செய்யவேண்டியது என்னவென்றால் குளத்தின் கரையோர திண்டுகளை பலப்படுத்தி தண்ணீர் தேக்க மட்டங்களை உயரச் செய்வதே. இது மாதிரியாகத்தான் கலிங்குளா மதகுகளை சீர்படுத்தி அதிப்படியான தண்ணீர் வழிந்து

ஓடுவதை தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி செய்வதனால் குளத்தின் தண்ணீர் தேக்கமட்டம் ஒரு ஸ்திரமான நிலைக்கு வந்ததாக கருதப்படலாம் இம் முறைகளை கையாண்டு வேலை துவக்க 27000 குளங்களுக்குமாக தலா ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 3000 விதம் சுமார் எட்டுகோடி ரூபாய் செலவு எதிர்பார்க்கப்படுகிறது. இது எனக்குதெரிந்த சொந்தவிவசாய அனுபவத்தின் பேரில் தெரிந்ததை கூறுகிறேன், இருந்த போதிலும் நான் கூறிய மதிப்பீடு ஏறக்குறைய சரியானதே என்பது எனது அபிப்பிராயம்.

2. ஜமீன்தாரி பிரதேசத்திலுள்ள சுமார் 8000 குளங்கள் ரயத்துவாரி பிரதேசத்திலுள்ளதைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலையிலிருப்பது யாவரும் அறிந்த விஷயமே. ஆகையால் இதைப் பழுதுபார்க்கச் செலவாகும் தொகை ரயத்துவாரிப் பிரதேசங்களிலிருக்கும் குளங்களுக்கு செலவு செய்யப்படுவதை மீறியதாயிருக்கும். தலா ஒவ்வொன்றுக்கும் ரூ. 4000 விதம் சுமார் 3 கோடி ரூபாய் தேவையாகயிருக்கும். தகுதியுள்ள நிபுணர்கள் இவைகளை சீர்திருத்தி புனர் நிர்மாணம்செய்ய எட்டு முதல் பத்து வருட காலம் பிடிக்கும் என்று அபிப்பிராயப் பட்டுள்ளார்கள்.

3. எவ்விதமாக சீர்திருத்தப்பட்ட போதிலும் மேற்கூறியவைகளுள் அநேகம் மழையை எதிர்பார்த்து நிற்கின்றன, என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். பருவ மழை சரிவர இல்லாததால் விவசாயிக்கு தேவையான பாதுகாப்பளித்தல் அவசியம். இதற்கு மாற்று நிவாரணம் ஆயக்கட்டு பிரதேசங்களில் கிணறுகள் வெட்டுவது ஒன்றே தான். எல்லா ஆயக்கட்டுகளுக்கும் கிணறுகள் தேவையாகயிருக்காது, சிலவற்றிற்குத்தான் கிணறுகள் தேவை. அவைகளும் கூட விவசாயத்திற்கு போதிய உபயோகமாக இராது. ஆகையால் இவைகள் இரண்டாவது அடியாக விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. நம் மாகாணத்தில் குளங்களின் உதவியால் நீர்பாசன உதவிபெறும் பூமியின் விஸ்தீரணம் சுமார் ஐம்பது லட்சம் ஏக்ராவாகும் இவைகளில் ரயத்துவாரி பிரதேசத்தில் 35 லட்சமும் மீதியுள்ள 15 லட்சம் ஜமீன்தாரி பிரதேசத்திலும் உள்ளவை, இப்பிரதேசங்களுக்கு 50,000 கிணறுகள் தலா ரூபாய் 500 மான்யம் அளிப்பதின் மூலம் ரூ. 2½ கோடி தேவையாக இருக்கும்.

4. நம் மாகாணத்தில் அநேக பிரதேசங்களில் வாய்க்கால்கள், குட்டைகள், நீரோடை அருவிகள் முதலியன விவசாயிகளுக்கு ஜீவநாடியாக விளங்குகின்றன. சுமார் 3 லட்சம் ஏகரா நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி இதனால் கிடைக்கின்றன. மேலே சொன்ன இயற்கை வளங்களை பூராவும் உபயோகிக்க முற்பட்டால் இன்னும் அநேக ஆயிரக்கனக்கான நிலங்களை சாகுபடி செய்ய உபயோகமுள்ளதாகவும், தற்போதுள்ள நிலங்களுக்கும் அதிகப்படியாக தண்ணீர் வசதியும் ஏற்படலாம். இத்திட்டம் நிறைவேற சுமார் 2½ கோடி ரூபாய் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்துவதன் மூலம் படுகை நிலங்களுக்கும், ஆயக்கட்டுகளுக்கும் அதிகப்படியான தண்ணீர் வசதியும் ஏற்படுத்த வசதியிருக்கிறது என்பதை கவனிக்கவும்.

5. ஏரி, குளம் இவைகளை புனர் நிர்மாணிப்பதில் அணைக்கட்டுகளும் தொடர்பு கொண்டுளளது. நதி கால்வாய்களின் உதவியால் நீர்ப்பாசன வசதிபெறும் ஆயக்கட்டுகளும் நதிகளின் தண்ணீரைக் கொண்டு தேங்கிய ஏரிகளும், குளங்களும் ஆயக்கட்டுகளுக்கு நீர்பாசனம் செய்யும் எல்லா நதிகளும் அணைக்கட்டுகளையே நம்பி யிருக்கின்றன. இவைகளில் அநேகம் பண்டைய காலத்து ஆட்சிமுதல் கவனிப்பாரற்றும், வண்டல்கள் பாசன பிரதேசங்களில் தங்கி போய்கிடக்கின்றன. இவைகளைப் பழுது பார்த்து செப்பனிட இரண்டு கோடி ரூபாய் தேவையாக இருக்கும்.

குளங்களில் தண்ணீர் தேக்கங்களை பெருக்க குளத்தின் ஓரமாக உள்ள பட்டா பூமிகளை கட்டாய ஆர்ஜிதம் செய்யவும் மற்றும் ஒரு கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

மேற் சொன்ன ஐந்துரக திட்டத்தின் மூலம் ஐந்து முதல் எட்டுவருடகாலத்தில் குளங்களை நிர்மாணம் செய்ய 19 கோடி ரூபாய் தேவையாக இருக்கும். நம் மாகாணத்தில் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தை துரிதமாக அமுல் நடத்துமாறு கேட்க சகல உரிமையுள்ளவர்களே. ஏனெனில் இதற்கு

செவிசாய்ப்பது சர்க்காரின் முக்கிய கடமையாகும். பயிர்களுக்கு போதிய தண்ணீர் பாசனவசதி இல்லாமலேயே தற்போதைய சர்க்கார் பெரிய ஆயக்கட்டுகளுக்கு அதிகப்படியாகவே பணம் வசூலிக்கிறார்கள். குளங்களைப்பாதுகாக்காமல் பணம் வசூல் செய்ய சர்க்காருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அப்படியிருந்தும் சர்க்காருக்கு வருடத்திற்கு ரூபாய் எழுபது லட்சம் நிகரவருமானம் இதன் மூலமாய் கிடைக்கின்றது. ஆகையினால் சர்க்கார் குளங்களை புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய திட்டத்தை உடனடியாக மேற்கொள்ளவேண்டியது கடமையாகும். மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமான உணவுப்பொருள்களுக்கு நெருக்கடி ஏற்படுவதின் பொருட்டு விவாதித்து தர்க்கம் புரிவது விவேகமற்ற செய்கையாகும். தற்சமயம் உணவு உற்பத்திப் பெருக்கு திட்டம் நெருக்கடியான நிலையில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைய வழி இருக்கிறது என்பது புலனாகவில்லை. மேற்கூறியவற்றில் எதிர்பார்த்த அளவுக்கு பலன் ஏற்படவழியிருக்குமானால் பொது ஜனங்கள் திட்டத்தை துரிதமாக அமுல் நடத்தவேண்டி கோருவது நியாயமானதே சர்க்காரும் அதை அமுலுக்கு கொண்டுவரக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

மொத்தத்தில் தற்போது வகுக்கப்பட்ட திட்டமானது ஐம்பது லட்சம் ஏக்ராவுக்கு சிறந்த முறையில் நீர்பாசன வசதியுள்ளனவாக இருக்கும். இதில் 35 லட்சம் ஏக்ராவுக்கு குளங்களிலிருந்தும், நான்கு லட்சம் ரயத்துவாரி பிரதேசத்திலுள்ள குட்டை, வாய்க்கால்கள் மூலமாயும் மீதியுள்ளவை ஜமீன்தாரி பிரதேசத்திலும் அடங்கியிருக்கும். குளத்தின் தண்ணீர் மட்டத்தை உயர்த்துவதோடு அல்லாமல் ஆயக்கட்டுகளிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள கிணறுகளின் தண்ணீர் மட்டமும் உயர்த்தப்படும். இதனால் கிணற்று பாசனங்களை நம்பியிருக்கும் விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். நான் இங்கே கூறுவது ஐம்பது லட்ச ஏக்ராவுக்கு சிறந்த முறையில் நீர்பாசனம் நடைபெறும் என்றும் அல்லாது மற்றும் அதிகமாக ஐம்பது லட்சம் ஏக்ராவுக்கு நீர்பாசன உதவிபெறும் என்று கூறவில்லை என்பதை கவனிக்கவேண்டும். சிலர் குளத்தை புனர் நிர்மாணம் செய்வதின் மூலம் அதிகப்படியாக மற்றும் ஒரு ஐம்பது லட்ச ஏக்கராவுக்கு நீர்பாசன உதவி கிடைப்பதோடல்லாமல் அதிகப்படியாக 20 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்து நம்மாகாணத்தின் பற்றுக்குறையை நிவர்த்தி செய்து இதர இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யும் நிலையில் இருப்போம் என்ற தப்பான அபிப்பிராயம் கொடுக்கிறார்கள்.

உண்மையைக்கூறுமிடத்து தற்போது இருக்கும் நிலைமை நீங்கி குளங்களில் சில வாரங்களுக்கு பதிலாக சிலமாதங்களுக்கு போதுமான தேக்கம் கொள்ளும்படி வசதி செய்யப்படும். இன்றைய நிலையில் நிலங்களுக்கு ஒருமாத காலத்திற்கு மாத்திரமன்றி பயிர்களுக்கு தேவையான தண்ணீர் வசதி செய்து அதன் விளைவாக விளைச்சல் அதிகமாகவும் சராசரி விளைச்சல் கிடைப்பதற்கு வழிகள் இருக்கின்றன. இத்துடன் நில்லாமல் இதர குட்டை, வாய்க்கால் முதலிய ஆயக்கட்டு பிரதேசங்களில் ஒருபோக விளைச்சல் நீங்கி இரண்டு அல்லது மூன்று போக விளைச்சல் ஏற்பட வழியிருக்கின்றன. இவ்விதமாக பல துறைகளிலும் நம்மாகாணத்தின் உணவு உற்பத்தி பெருக வழிகள் உண்டு. (தொடரும்.)

இன்னுசெய் தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

துன்பம் செய்தவர்களுக்கும் இன்பமானவற்றையே செய்யாது விட்டால் பெருந்தகைமை என்பதன் பொருள் என்ன ?

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

ஆசிரியருக்குக் கடிதம்.

நாளது 1950 வருடம் எப்ரல் மாதம் 14 தேதியில் கூடிய தென் இந்திய மில் முதலாளிகளின் சங்கம் நிறைவேற்றியிருக்கும் நடவடிக்கைத் தீர்மானங்களின் சாராம்சத்தை விவசாயிகள் வாசித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இச்சங்கத்தின் நடவடிக்கைகள் மில் பங்காளிகளுடைய நன்மையைக் கருதியும் குறிப்பாக மில் மானேஜ்மெண்டினுடைய நன்மையே பெரிதாகக் கருதி தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை உண்டாக்கி, அதைக் கொண்டு விவசாயிகளுடைய பருத்திக்கொள்முதல் விலையை நிர்ணயித்திருக்கிறார்கள்.

இந்த கட்டுப்பாட்டினால் பருத்தி உற்பத்திசெய்யும் பெருவாரியான சிறிய நிலச்சுவான் தாரர்களையும், குத்தகை தாரர்களையும் பாதிக்கக் கூடியதாயிருக்கிறது. ஏனென்றால் இவர்கள் பொருளாதார பலத்தில் சக்திக்குறைவாக இருப்பதினால் தங்களுடைய பருத்தியை இருப்பு வைத்து நல்ல விலைக்கு விற்கக்கூடிய நிலைமையில் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். தவிர விவசாயிகள் தங்களுக்குள் கட்டுப்பாடான நிலைமையில் இல்லாத காரணத்தால் இந்த பெரிய மில் முதலாளிகளை எதிர்த்துப் போராடக் கூடிய நிலைமையில் இல்லாமலும் இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நிராதரவில் இருக்கிற சிறிய விவசாயிகளுடைய நலனுக்கு விரோதமாக இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் ஒரு (Gentlemen's Agreement) கண்யமான கனவான்களின் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். விவசாயிகளை பாதிக்கக்கூடிய அளவிலே இது கண்யமான கனவான்களின் ஒப்பந்தமா என்று நான் கேட்கிறேன்?

சென்ற வருடத்திய ஆரம்பத்திலே பருத்தியின் விலை கட்டுப்பாடு செய்யவேண்டும் என்று இந்த பெரிய மில் முதலாளிகள் பிரம்ம பிரயத்தினம் செய்தார்கள். ஆனால் நமது சர்க்கார் அன்றும், இன்றும் உடன்படவில்லை. சர்க்காரே செய்யத் துணியாத காரியத்தை இவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டைக்கொண்டு செய்வது நியாயமா என்று நான் கேட்கிறேன். ஆனால் அவர்கள் சொல்லலாம்:- "சர்க்கார், கருங்கண்ணி, கம்போடியா பஞ்சினுடைய உச்ச விலைகளை நிர்ணயித்திருக்கிறார்களே ஒழிய, பருத்தியினுடைய உச்ச விலையை நிர்ணயிக்கவில்லை அதனால் மில்களுக்கு கட்டுபடி ஆகாது" என்று கேட்கலாம்.

இதற்கு நான் சொல்லக்கூடிய பதில்:- எந்த மில்லாவது சென்ற வருடத்திலே டிவிடெண்டு பங்கிக்கொடுக்கும்போது 100-க்கு 6 அல்லது 5 விதாசாரத்திற்கு கம்மியாக கொடுபடவில்லை என்று நான் நம்புகிறேன். இந்த விதாச்சாரம் அவர்களுக்குக்கட்டுபடி இல்லையா? தவிற சென்ற வருடத்தில் சர்க்காரும் மில் டிவிடெண்டுகளை 6%-க்கு மேல் கொடுக்கக்கூடாது என்று உத்திரவு செய்திருந்தார்கள். இதன் காரணமாக மில்கள் ஏராளமான துகைகளை மூலதனமாகவும், அல்லது ரிசர்வ் பண்டாகவும் ஒதுக்கியிருக்கின்றன. இதை கவனிக்கும்போதும், மில்களுக்கு எந்த விதத்திலும் நஷ்டம் ஏற்படவில்லை. என்றுயூகிக்கலாம். தவிற இவ்வருடத்தில் டிவிடெண்டு கட்டுப்பாட்டை அறவே சர்க்கார் எடுத்து விட்டார்கள். இதன் காரணமாக மில்கள் அதிகமாக டிவிடெண்டை பாகித்துக்கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. தவிற நூல் கண்ட்ரோலையும் சர்க்கார் ஓர் அளவு தளர்த்தி இருக்கிறார்கள். இது மில்தாரர்களுக்கு சர்க்கார் காட்டிய ஒரு சலுகையாகும்.

இவ்விதம் அனுகூலமாகிய நிலைமைகளில் இருந்து கொண்டிருக்கும், தென் இந்தியா மில் முதலாளிகளின் சங்கத்தீர்மானமானது ஏழை விவசாயிகளை மிகவும் பாதிக்கக்கூடிய நிலைமையை உடையதாக இருக்கிறது. இது விஷயத்தில் நமது சென்னை சர்க்காரும், மத்திய சர்க்காரும் கண் மூடிக்கொண்டு இருப்பது கட்டுப்பாடு உள்ள மில் முதலாளிகள், கட்டுப்பாடு நிலைமையில் இல்லாத ஏழை விவசாயிகளை சுரண்டுவதில் இடம் கொடுத்ததாகவே கருதப்படும்.

வி. சி. பழனிசாமிக் கவுண்டர்,
பிரசிடெண்ட், ஜில்லா விவசாயிகள் சங்கம்,
கோயமுத்தூர்.

மண் வள ஆராய்ச்சி ★

E. B. Balfour ஆங்கிலத்தில் எழுதிய "The living soil" என்ற புத்தகத்திலிருந்து சில குறிப்புகள்.

மனித சமூகம் இடைவிடாத ஜனப் பெருக்கத்தினாலும் மற்றும் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக ஓங்கி எழுந்துள்ள தொழில், விஞ்ஞான வளர்ச்சிகளால் இரண்டு விரிவான அபிவிருத்தி அடிப்படை அம்சங்களை சரித்திரத்திலேயே ஏற்படுத்திவிட்டது.

மால்தூசியன் என்ற வேதாந்தி தன் சித்தாந்தத்தில் கூறியுள்ளபடி, தற்போது பெருகிவரும் ஜனக்கூட்டத்தை கட்டுப் படுத்த சொந்த முயற்சி எடுக்காது போவோமானால் உலகின்கண் உணவுப் பற்றாக் குறைவால் பெரும் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்று பல அறிஞர்கள் ஹேஸ்யம் கூறுவதற்கிணங்க தற்சமயம் ஓயாது பெருகிக் கொண்டே வரும் ஜனப்பெருக்கமே இதற்கு முதலாவது காரணமாகும்.

கடந்த 17, 18, வது நூற்றாண்டுகளில் ஏற்பட்டுள்ள விரிவான அபிவிருத்திகளின் மூலம் இந்த 20ம் நூற்றாண்டிலும் தற்கால தொழில் விஞ்ஞான நுட்பங்களைக் கொண்டு ரசாயன உரம், யந்திர உதவியினால் உழுதல் மற்றும் தரமான விதைகளைக் கொண்டு உபயோகிப்பதின் மூலம் மனிதன் உணவு உற்பத்தி அதிகரிப்பு செய்ய திட்டமான ஒரு வழிக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சிற்சில பாகங்களில் ஆராய்ச்சியாளர்கள் நடத்தி வருவதுபோல் இரண்டு வேறுவகை விதைகளை, பயிர்களை ஒன்றாக ஒட்டிச் சேர்த்து நவீன முறைகளில் ஆராய்ச்சி நடத்துவது போலல்லாமல் நம் ஆராய்ச்சியாளர்கள் புதிய முறைகளை கடைபிடிக்காமல் பழைய முறைகளை கையாளுகிறார்கள். மற்றும் புதிய விதைகளை உபயோகிப்பதன் மூலம் அதன் தரத்தைப்பற்றி ஆராய்ச்சிக் காரரிடையே சிறிது அபிப்பிராய பேதம் எழுந்துள்ளது. நிற்க நம்மவர்கள் தற்போதுள்ள ரகங்களைக்கொண்டே உற்பத்தி பெருக்க நோக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

ரசாயனப்பொருள்கலந்த உப்புகளை உரமாக உபயோகித்து சாகுபடி செய்வதன் மூலம், புஷ்டி, சத்து குறைவான மட்டரக விளைச்சல் ஏற்படுவதாக அநேகரிடையே அபிப்பிராயபேதம் நிலவி வருகிறது.

ஜெர்மனிய தேச லைபி என்பவரும், இங்கிலாந்தில் ராதெம்ஸ் டெடிலுள்ள அவரது சகாவும் சென்ற நூற்றாண்டில் ரசாயன உரங்களை சாகுபடி செய்வதற்கு அதிகமாக உபயோகித்து பார்த்து பரீட்சைசெய்து அதனால் ஏதாவது விசேஷ பலன்கள் உண்டா என்பதை கண்டறிய முடியாமற்போனார்கள் என்பதை நாம் கவனித்துப்பார்க்க வேண்டும். ஏன்? இன்றும் நிலமை திருப்திகரமாக தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என்பதே கேள்வி.

மேற் கூறியவற்றிற்கு ஒரு நிலையான முடிவு கூறுவது சற்று கஷ்டமான பிரச்சனை தான் காரணம் என்னவென்றால் தற்போதுள்ள ரசாயன உர உற்பத்தி, வினியோகம் எல்லாம் சில பெரிய வியாபாரஸ்தாபனத்திடமும் இன்னும் சிலவகைகள் சர்க்காரின் ஆதரவுடன் தங்கள் உற்பத்தி பொருள்களை இடைவிடாது விளம்பரம் செய்து வியாபாரம் நடத்துவதால், சொந்த ஹோதாவில் ஆராய்ச்சி நடத்த பணவசதி குறைவும், சர்க்காரின் ஆதரவும் கிடைக்காத சில தனி நபர்களுக்கு ஊக்கமளிக்க முடியாமற் போய்விடுகிறது.

நிலைமை எவ்வாறு என்பதை கீழே கூறியவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம் தற்சமயம் வனஸ்பதி - ஹைட்ரேஜெனேடெட் ஆயில்கள் முதலியவற்றை தயாரிப்பதிலுள்ள நன்மை தீமைகளைப்பற்றி வெளிவந்துள்ள சாதக பாதகங்களை போன்றுள்ளது. மேலே கூறியவற்றின் நிலைமை தனி நபர்கள் நடத்தும் ஆராய்ச்சியும் உற்பத்தியாளர்களின் ஆராய்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக விளங்குகிறது.

உலகில் எப்பாகங்களிலும் ஜனப்பெருக்கம் அதிகரித்துக்கொண்டு வருவதால் உணவு உற்பத்தி பெரும்பாலும் தேசியமய

மாக்குவதிலும் அல்லது சர்க்காரின் கட்டுப்பாடுக்கு உட்பட்ட தொழிலாகவே விளங்குகிறது.

மனிதன் வாழ்வுக்கு திடமாக வலுவு ஊட்டுவதற்கு நல்ல புஷ்டி, சத்து நிறைந்த ஆகாரமேதேவை என்பதை உணர ஆரம்பித்துவிட்டான். ஆனால் தற்சமயம் நடத்தப்பட்டுவரும் ஆராய்ச்சியின் பலன்கள்வேறு விதமாக இருக்கின்றன. விடமின் மற்றும் பல சத்துப்பொருள்களை பற்றி மனிதன் தெரிந்து கொண்டது மிகவும் சொற்பமே மனித - மிருக வர்க்கங்களைக்கொண்டேதான் இன்னும் புஷ்டியான உணவைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யுத்தகாலங்களில் வெடி மருந்துகளும் குண்டுகளும் தயாரித்துவந்த உற்பத்தி சாலைகள் எல்லாம் சமாதானம் ஏற்பட்டதும் நூறு கோடி டன் எடையுள்ள உரங்களை உற்பத்தி செய்து சாகுபடி நிலங்களுக்கு ஏராளமாக வாங்கி முடக்கும்படி தீவிரமாக பிரசார விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

புஷ்டி சத்து நிறைந்துள்ள உணவைப் பற்றியே முக்கியமானதொரு பிரச்சனை எழுந்துள்ளதால் இந்த விஷயத்தை மேலும் விஞ்ஞான ரீதியிலே ஆராய்ச்சி நடத்தும் பொருட்டு ஒரு தனி பொருப்புள்ள ஸ்தாபனத்திடம் விட்டுவிட வேண்டியவிஷயமாகும்.

ரசாயன உரத்தின் விசேஷ குணங்களைப்பற்றி வெகுநாள் ஆராய்ச்சி நடத்திவந்த அனுபவங்களைக்கொண்டு அநேகர் பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் லேடிபால்வர் எழுதி வெளியிட்டுள்ள "Living Soil" என்ற புத்தகத்தில் வெளியான விஷயங்களுக்கும் தகுந்த ஆதாரத்துடன் வேறுபாடுகளை விளக்கியிருக்கிறார்.

நிலத்தின் தன்மைக்கு தகுந்தபடி பயிர்களையும், விதைகளையும் தேர்ந்து எடுக்கப்படவேண்டியது எவ்வளவு முக்கியமானதொரு விஷயம் என்பது தெரியவரும்.

இதுவரையிலும் ரசாயன உரத்தின் உபயோகத்தை மறுத்து வந்தவர்களிடையே ஒரு நிரந்தரமான முடிவுகாணாமல் ஜனங்களுக்கு தங்கள் ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள பலன்களை வெளியிட்டுள்ள விஷயம் அறைகுறையான விஷயம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதற்கு பயிர்களை வளர்ப்பது என்ற விஷயத்தை ஆராய்ந்து அறிந்து வெளியிட்டுள்ள உண்மைகளைக்கொண்டே உதாரணம்கூறலாம்.

இதிலிருந்து சாகுபடி செய்யும் நிலத்தில் உள்ள ஜீவ அணுக்களுக்கும் அதன் மூலம் உண்டாகும் பயிர்களுக்கும் உள்ள தொடர்பு மற்றும் ரசாயன உரம் உபயோகிப்பதனால் ஏற்பட்டுவரும் விசேஷ பலன்களைப்பற்றி ஆராய வேண்டியது எவ்வளவு முக்கியமான விஷயம் என்பது தெரியவரும். தவிரவும் உரங்களைப்பற்றி ஆராய்ந்து அறிய பொறுப்புவாய்ந்த தனி நபர்களால் நடத்தப்படும் முயற்சி வரவேற்கத்தக்கது.

குடியானவர்கள் ஜீவ அணுக்கள் நிரம்பியுள்ள உரங்களை உபயோகித்து அதிலிருந்து உண்டான விதைகளை அவ்வப்போது வாங்கி உபயோகித்து நீண்டகால ஆராய்ச்சி நடத்திய தின்விளைவுகளைப்பற்றி ஆல்பர்ட்ஹோவார்டு கூறியுள்ள உண்மைகளை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நம் இந்தியாவிலும் கையாளப்பட்டுவரும் முறைகளைப்போல் அதாவது விதைப்பதற்கான விதைகளை புதிதாக அவ்வப்போது வாங்கி அத்துடன் கலப்பு ரசாயன உரங்களை உபயோகித்து நீண்டகால ஆராய்ச்சி நடத்துவதுபோலல்லாமல் பழையவிதைகளைக்கொண்டு அடுத்துவரும் விதைப்புகாலங்களில் அதையே திரும்ப விதைப்பதன் மூலம் அடிப்படை ஆராய்ச்சி நடத்துவதனால் உண்டாகும் பலாபலன்களைப்பற்றி உண்மை தெரியவரும்.

நவீன சாதனங்களைக்கொண்டு ஆராய்ச்சி நடத்தும் பிரபல அமெரிக்காதேசத்தில் மின்சார சக்தி கொண்டு ஆகாயத்திலிருந்து ரசாயன உப்பு கலந்த தண்ணீரை தூவி அதனால் உண்டாகும் பயிர்களின் விதையிலிருந்து மறுபடியும் அதை மறுமுறை உபயோகத்திற்கு ஏற்றபடி சத்து இருக்கிறதா, என்பதைப்பற்றியும் ஆராய வேண்டியது முக்கியமாகும் இது ஒரு முக்கியமான பிரச்சனையாக கருதப்பட்டுவருகிறது. இம்முறைகளால் உண்டாகும் பயிர்களின் புஷ்டி சத்து குறைவாகவும் வருங்கால சந்ததிகளின் தன்மை பாதிக்கும் விஷ

(11-ம் பக்கம் பார்க்கவும்)

ஔவையார் என்ன கூறுகிறார்?

[ஒரு புலவர்]

எதைப்பற்றி? உழவைப்பற்றித்தான். ஒழுங்காய் நடந்தால் உழவு. இல்லா விட்டால்? இல்லாவிட்டால் என்ன? முதலெழுத்திற்குப்பதில் அதற்குப்பிந்திய குற்றெழுத்தைப் போடவேண்டியதுதான், அது? இகரம்.

உழவு ஒழுங்காய் நடப்பதற்கு ஔவையார் என்ன கூறுகிறார்? "முதற்கண், ஏர் வேண்டும், குறைந்தது இரண்டு ஏராவது இருக்கவேண்டும். அடுத்தது, விதைத்தானியம், அது விலைக்கு வாங்குவதாயிருக்கக் கூடாது தானே தன் வேளாண்மைப்பயிரின் கதிரில் நன்கு முற்றி விளைந்த தானிய மணிகளைக் கொண்டதாய்ப் பொறுக்கி யெடுத்துச்சேர்த்ததன் சொந்த விதைத்தானியமாயிருக்கவேண்டும். அதற்கு அடுத்தது நீர். விளை நிலத்திற்கு வெகுதூரத்திலிருந்து சில நிலங்கட்கு நீர் கொணர்ந்து பாய்ச்சுவர் அவ்வாறன்றித் தோட்டத்திலேயே கிணறு இருக்கவேண்டும். அல்லது வாய்க்காலை அடுத்த வயலாயிருக்கவேண்டும்.

அடுத்தது விளை நிலம் தன் வீட்டிற்கு மிக அணியதாயிருக்கவேண்டும். (தோட்டத்திலேயே உழவன் குடியிருக்கவேண்டும்.) அல்லது ஊருக்கு அணியதாகவாவது விளை நிலமிருக்கவேண்டும். ஏர்வாடியாக இருக்கக் கூடாது. அடிக்கடி சென்று கவனித்து வரத்தக்கதாயிருக்கவேண்டும்.

அடுத்தபடி ஏவலாளர் அவர்கள் எப்படி யிருக்கவேண்டும். தலைவனே நேரில் இருந்து நடத்துவித்த வேலைகள் எவ்வாறு இருக்கும், அவ்வாறே தலைவனில்லாத பொழுதிலுமிருக்கும்படி செய்து முடிக்கும் ஏவலாளரை உழவன் உடையவனாயிருக்க வேண்டும். அல்லது. தலைவன் இடும் முறைப்படி வேலை செய்து காட்டவல்ல அதற்கு மாறாகச் செய்யாத ஏவலாளரை யாவது உடையவனாயிருக்க வேண்டும்.

இங்ஙனங் கூறியதை இயைந்து நடந்தால் உழவு, உழவு தான். இன்றேல் அதன் எதுகை தான்!

பல குடை நீழலும் தம்குடைக்கீழ்க்காண்பர்
அலகுடை நீழலவர்.

—(வள்ளுவர்)

யான் கண்டனையர் என்னிளையரும் —

என்பது புறநானூறு

'எப்படியிருந்தால் உழவு சிறக்கும்? என்று சிலர் ஔவையாரைக் கேட்ட போது மேற் கூறிய கருத்தமைந்த பாடலை அவர் கூறினதாக நூல்களில் உள்ளது. இக் கருத்தமைந்த வெண்பா.

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய் ஊருக்குச்
சென்றுவர வணித்தாய்ச் செய்வோருஞ் சொற்
கேட்கில்
என்றும் உழவேயினிது — என்பது —

புகையிலை — பக்குவ முறை.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

5. தரப்படுத்தல், கட்டுதல்

புகையிலையில் தரப்படுத்துதல் முக்கியம் முதல் தரமான பெரிய இலைகளை (பெருமை என்பது சுருளின் நீளத்தையும் சுற்றளவையும் பொறுத்துள்ளது) தனியாகவும், நெகிழ்ச்சியற்றவற்றை இரண்டாந்தரமாகவும், மடமடப்பானவற்றையும் கறுத்துப்போனவற்றையும் மூன்றாந்தரமாகவும் பிரித்துவைத்துக்கொண்டு கட்டுக்கு 50 தழைவீதம் சேர்த்து நூலால் கட்டிவைக்கவேண்டும். ஈரம் பட்ட வாழைநாரை உபயோகிக்கக்கூடாது. தரப்படுத்திக்கட்டுகள் தயாரானபின் அவைகளைக் காற்றுக்கு அடக்கமாகக்கொணிப்பைகளில் சுருட்டி வைக்கவேண்டும். மணம் வெளியேறிவிடாமல் இருப்பதற்கு அவைகளைப்பொதிந்துவைத்தல் அவசியம்.

6. சிதறிப்போனவையும், கழிவுகளும்.

கட்டுகள் தயாரானபின் எஞ்சியுள்ள குப்பையையும் செடிக்காம்புகளையும் தூள் செய்து சேமித்துவைக்கலாம். புழுப்பூச்சிகள் வாராதபடி இவை எருவாகவும் புகையிலைக் கஷாயப் பொருளாகவும் பயன்படக்கூடும். இப்படி இக்கழிவுகள் உபயோகப்படும் என்ற விளம்பரம் நம் நாட்டில் இன்றும் பரவவில்லை.

உழவனும் பட்சிகளும்

ஹங்கேரிய தேசத்தில் விவசாயிகள் ஒருவகைக் குருவிகள் பயிர்களை அழித்து நாசம் செய்து வருவதாக கருதி அதை பூண்டுடன் அழிக்கத் தொடங்கிய சிறிது காலத்திற்கெல்லாம் அதாவது ஐந்து வருஷ காலத்திற்குள்ளே நாடெங்கும் பயிர்கள் பூச்சிகளினல் தொத்துநோய் கண்டு அழியத் தொடங்கியபொழுது திரும்பவும் பயிர்களை அழிக்கும் பூச்சிகளை தொலைப்பதற்கு அக்குருவிகளை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பயிர்களுக்கு பெரிய எதிராளியாக விளங்கிய பூச்சிக்கூட்டங்களையே அடியுடன் துலைத்து ஒழித்துக்கட்டி நாட்டை பெரிய ஆபத்திலிருந்தும் காப்பாற்றிய பொறுப்பு அக்குருவியையே சாரும்.

பிரான்சில் திடுக்கிடக்கூடியதும் மேலும் மேலும் தொடர்ந்து கொண்டே வந்ததுமான மோசமான விளைச்சலைப்பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்ய 1861-ல் விவசாய மந்திரி ஒரு விஞ்ஞான கமிஷனை நியமித்தார். மேற்படி கமிஷன் பட்சிகளை அடியோடு நாசம்செய்து துலைத்துவிட்டதன் காரணமாகவே சந்ததியற்று போனதன் பயனாக பயிர்களை அழிக்கும் தொத்துநோய் பூச்சிகளை தடுக்கமுடியாத நிலையில் பெருவாரியாக தோன்றி பரவலாயின என அபிப்பிராயப்பட்டது.

பறவைகளை அழித்தலினல் ஏற்படும் அமோகமான நஷ்டங்களுக்கு மேற்கண்ட இரண்டு உதாரணங்களும் போதிய சான்ருகும். இவை இந்தியாவின் விவசாய நலத்திலும், விவசாயிகளின் க்ஷேமாபிவிருத்தியிலும் நலன்கொண்ட ஒவ்வொருவரின் மனதிலும் பசுமரத்து ஆணிபோல் பதிக்கக்கூடிய தொன்ருகும். பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைத் தடுக்க விஞ்ஞான ஆராய்ச்சிகளின் நன்மைகளை பயன்படுத்துவதில் மிகவும் பிற்போக்கு மனப்பான்மையுடன் இருப்பதால் இன்றைய இந்தியாவில் இதர முன்னேற்ற நாடுகளைவிட பட்சிகளையே நம்பி இருக்கிருேம். பயிர்களை அழிக்கும் தொத்துநோய் பூச்சிகளிடன் போர் தொடுப்பதில் நமக்கு பட்சிகள் பக்கபலமாக விளங்குகிறது. ஆனல், துரதிருஷ்டவசமாகவும் சரியாக புரிந்துகொள்ளும் தன்மையில்லாததாலும் இதன் முக்கியத்வத்தை அறிந்துகொள்ளும் சக்தியற்றவராயிருக்கிருேம். விவசாயிகளைச் சுற்றிலும் விரோதிகள் சூழ்ந்து இருப்பதுபோல சில தோழர்களும் இருக்கிருர்கள் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். இது அவனது அறியாமையே, வருந்தத்தக்கதுமாகும். தனது வயல்களுக்குள் வரும் ஒவ்வொரு பட்சிகளையும் பரம விரோதியாக கருதி முற்றிலும் அதைத் துலைக்க முற்பட்டுவிடுகிருன். இதனல் எல்லாருக்கும் எழுத்தறிவு இல்லாதவன் செய்கை பாதிக்கிறது. இவ்வித மூடச்செய்கை படித்தவன் படிக்காதவன் எல்லோராலும் மற்றும் விவசாயத்தைப்பற்றி அறிவு படைத்தவர் எல்லாராலும் செய்து வரப்படுகிறது மிகவும் வருந்தற்பாலது.

நாட்டின் பொருளாதாரத்தில் பட்சிகளின் பங்கை உணராது மற்றும் அதனிடத்தில் அன்பு செலுத்தாது இருந்து வருகிருேம். சமீபகாலத்தில் ஐரோப்பாவிலும் மற்றம் அமெரிக்க நாட்டிலும் தோட்டக்கலை, காட்டு வளர்ச்சி, மற்றும் விவசாயத்திலும் பட்சிகளின் அவசியம் பொருளாதார முன்னேற்ற வளர்ச்சிக்கு அவசியமென்று ஆராய்ந்து முடிவுக்கு வந்துள்ளார்கள். சர்க்காரின் உதவியைக்கொண்டு பெரும் பொருட்செலவில் பட்சிகளின் உணவு, ஆகாரம் முற்றும் அதன் வளர்ப்புபற்றி தீவிர ஆராய்ச்சி செய்ய பல விதங்களிலும் பரிசோதனை செய்ய அநேக ஆராய்ச்சிக் கழகங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். தக்க ஆதாரங்களைக்காட்டி பரிசோதனைகளை நடத்தி விவசாயிகளுக்கு பட்சிகளை சாஸ்திர ரீதியில் கட்டுப்படுத்தி அதன் பலனை பொது மக்களுக்கும் தேசத்தின் வருமானம் பெருகியும் ஏராளமான அனுகூலங்கள் ஏற்பட்டுள்ளது தெரியவரும். பயிர்களுக்கு தொத்து வியாதி பரவும் பூச்சிகளைப்பற்றி சமீபத்தில் ஆராய்ச்சி செய்து அதன் பலாபலன்கள் என்ன என்பதைப்பற்றி நாம் அதிகமாக இங்கு கூறவேண்டியதில்லை. பூச்சிகளை விஞ்ஞான சாஸ்திர ரீதியில் கட்டுப்படுத்திக் கொண்டுவருகிருர்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

இந்தியாவின் செழிப்பில் அக்கரை கொண்டு அதன் வளர்ச்சியில் கருத்து கொண்டுள்ளவர்கள் பட்சிகளைப்பற்றி தீவிர மாக ஆராய்ச்சி செய்யவும், பொருளாதாரத் தில் அதற்கு ஒரு முக்கிய பங்கு உண்டு என்பதை நன்கு உணர்ந்து அதை ஒரு கலையாகவே கருதி அதன் முன்னேற்றத் திற்கு பாடுபடவேண்டியது முக்கியமான விஷயமாகும். இதைப்பற்றி எவ்வளவு சீக்கிரமாக முயற்சி எடுத்துக்கொண்டாலும் அதனால் விவசாயிகளுக்கு பெருத்த நன்மை யே யுண்டாகும்.

நமது அகண்ட இந்தியாவின் விவசாயப் பொருளாதாரத்தில் பட்சிகளின் அந்தஸ்து பற்றி இதுவரை தெரிந்து கொண்டது எல் லாம் மிகவும் சிறிய அளவிலேதான் இருக் கிறது. அதை பூதக்கண்ணாடியில்தான் வைத்துத்தெரிந்து கொள்ளமுடியும் என் றால் அதைப்பற்றி ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

முப்பது வருஷங்களுக்கு முன்பு பூசாவில் நடத்திய தன் மூலமாகவும் சமீபத்தில் லையால் பூரில் நடத்தியதன் மூலமாகவும், பயிர் செய் யும் பண்ணைகளில் அதன் உணவு என்ன என்பதைப்பற்றி பூரணமாக புரிந்து கொ ள்ளாமல் போனாலும் இதன் எதிர்கால நல் வாழ்வில் நம்பிக்கை வைத்துள்ள ஒவ்வொரு வனுக்கும் மேற்படி ஆராய்ச்சிகளின் மூலம் சிறிதளவு நம்பிக்கை அளித்துள்ளது.

விவசாயிக்கு பட்சி சிநேகிதனா அல்லது விரோதியா? சற்று விளக்கமாக கூறின் விவசாயிகளுக்கு பட்சிகளின் நடமாட்டத் தால் சாதகம் ஏற்படுகிறதா அல்லது தீங்கு விளைகிறதா என்பதைப்பற்றி நாம் ஒரு முடி வுக்கு வருமுன்னரே நாம்பட்சிகளின் உணவு உட்கொள்ளும் முறை முதலியவற்றைப் பற்றி தீவிரமாக ஆராயமுற்படுவோம். நாம் இங்கு பட்சிகள் வாழ்நாட்கள் முழுவதும் எவ்வாறு ஜீவனம் செய்கின்றன என்பதைப் பற்றியேதான் ஆராய்ச்சி. ஏனெனில் சில பட்சிகள் பருவமடைந்து இருக்கும்போது பயிர்களின் முதிர்ச்சியை நாடுகின்றன. அவைகளைப்பற்றி நாம் அக்கரை கொள்ள வேண்டியதில்லை. எல்லாருக்கும் பொதுவாக தெரிந்த உதாரணத்தைக்கொண்டே விளங் கக்கூறலாம்:—

வீட்டில் வளரும் சிட்டுக்குருவிகள் மூன்று அல்லது நான்காக சேர்ந்து வாழ் கின்றன. அவைகள் அநாதையாய் திரிகின் றன. அவைகள் கூட்டைவிட்டு சென்று தாமே உணவு தேடிக்கொள்வதற்கு வழக்க மாக இரண்டு வாரகாலம் செல்லும். கூடு களில் இருக்கும்போது தாய்பட்சமாக அடிக் கடி உணவு ஊட்டுகிறது. சிறு பட்சிகள் நிறைய தீனி உட்கொள்ள ஆவலாக துடிக் கின்றன. குஞ்சு பொரித்து வெளிவந்த சில நாட்களுக்குதன் எடைக்கும் அதிகமான புழு பூச்சிகளை உணவாக 24 மணிக்குள் தின்று ஜீர்ணிக்கின்றன. வழக்கமாக இக்குருவிகள் தாங்கள் கூடுகளில் வசிக்கும் காலங்களில் வெட்டுக்கிளி, கரப்பான்போன்ற மிருதுவான உணவுகளையே பெரும்பாலும் விரும்புகின் றன.

மேலே கூறியவைகள் பெரும்பாலும் ஏன் அநேகமாக முற்றிலும் பயிர்களுக்கு பெரிய நாசகேட்டை விளைவிக்கும் சக்தி வாய்ந்தவைகள். வெட்டுக்கிளிக்கு சாதாரண மாக ஒரு நாளைக்கு தன் எடையைப் போல இரட்டிப்பு மடங்கு இலைகளை காலக்கிரமத் தில் தின்று விடக்கூடிய சக்தி உண்டு. ஒரு ஜோடி சிட்டுக்குருவியானது தன் குஞ்சுகளை காப்பாற்றும் பொருட்டு ஒரு நாளைக்கு 220 லிருந்து 260 தடவை பறந்து சென்று இரை தேடிக்கொண்டு வருவதாக கண்டு பிடிக்கப் பட்டது. இவைகளுள் அலகுள்ளவைகள் ஒரு தடவைக்கு அனேக பூச்சிகளை கொத் தித்தின்று விடுவதாக தெரியவந்தது. இதி லிருந்து ஒரு ஜோடி குருவி 12 தடவைகளில் ஒரு சிறிய கால அளவில் எவ்வளவு புழு பூச்சிகளை நாசம் செய்யக்கூடும் என்பது கணக்கிடலாம். தவிரவும் பூச்சிகளின்சந்தான விருத்திகளும் இதிலிருந்து கணக்கு எடுத் துக்கொள்ளலாம்.

இவ்வாறாக குஞ்சுகள், பூச்சிபுழுக்களின் மேல் பலத்த படையெடுப்பு செய்து கொன் று தின்று தன் தாய் இனத்தார் உண்ணும் உணவுகளைத்தேட வெளிவந்து விடுகின்றன முக்கியமாக தானியங்களையும், விதைகளை யும் உணவுக்காக நாடுகிறது. வயல் வெளி களிலும், தரைகளிலும் கேட்பாரற்று கீழே விழுந்து கிடக்கும் தானியங்களை இவைகள் உட்கொள்ளுவதில் யாதொருவிதமான தீங் கும் நேரிடுவதில்லை, ஆனால் சில காலங்களில் மேற்கூறிய சிட்டுக்குருவிகள் கூட்டங்களாக சேர்ந்து கம்பு பயிர்கள் பக்குவமான சமயங் களில் இருப்பதை உட்கொள்ள முற்படுகின் றன. இதனால் ஓரளவு தீங்கு நேரிடுவது

வாஸ்தவமே. இதுவல்லாமல் பூக்களும் அவைகளின் மொக்குகளும் பெரிய அளவில் நாசம் செய்யப்படுவது தெரியவரும். இதுமாதிரியே காய்கறி தோட்டங்களிலும் சில துன்பங்களைசெய்கின்றன. இதனுல் நாம் குருவிகளை தோழன் அல்லது விரோதி என்ற பாகுபாட்டை செய்வதா, இதன் வளர்ச்சிக்கு இடம் தருவதா, அதன வளர்ச்சியில் கண்காணிப்பு ஏற்படுத்துவதா அல்லது அதன் வர்க்கத்தையே நிர்மூலமாக அழிப்பதா என்பதே எடுத்துக்கொள்ள வேண்டிய பிரச்சனை இதைப்பற்றி ஒரு முடிவு கூறுவது சற்று கடினமான விஷயமே.

நமக்கு ஆதார பூர்வமான புள்ளி விவரங்கள் பட்சிகளின் நடமாட்டத்தைப்பற்றி தீர்க்கமாக தெரிந்துகொள்ளுகிற காலம் வரைக்கும் நாம் இதைப்பற்றி கட்டுரையின் ஆரம்பத்தில் கூறுவது போலவே எடுத்துக் கொள்ளலாம். இதனுல் ஒரு சங்கடமான நிலை தோன்றுகிறது. எப்படியெனில் நம் சொந்த விஷயங்களில் நாம் நமது தோழன் யார், விரோதி யார் என்பதை தீர்க்கமாக சொல்ல முடிவதில்லை. ஆனுல் சில குறிப்பிட்ட இடத்திற்கு சிலவற்றை நண்பனுகவும் சிலவற்றை விரோதிகள்ாகவும் கருதப்படலாம் இது நேர்மையல்ல பல ஜாதி பட்சி வர்க்கங்களை பற்றி முழு அளவுக்கு அதன் குணவிஷேசங்களை அறியாமல் அதை அடியுடன் தொலைப்பதற்கு முற்படுவது தீவிர ஆராய்ச்சி செய்யாமல் செய்யும செய்கையாகும்.

பறவைகளின் வளர்ப்பு அது மனிதவர்க்கத்துடன் கொண்டுள்ள சம்பந்தம் தொடர்பு என்ன என்பது பற்றியும் அதன் முழு நடவடிக்கைகளைப்பற்றியும் சரியான புள்ளி விவரங்கள் சேகரிக்கும்படி ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் நடத்த வேண்டியது முக்கியமான காரியம். இதற்கு பொருட் செலவு அதிகம் நேரிடலாம் ஆனுல் சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கு செலவாகும் பொதுப்பணத்தை செலவு செய்து அடையும் பலன்களைப்பற்றி சிறிதும் மனதில் கவலைப்படக்கூடாது.

நண்பனு அல்லது விரோதியா என்ற முடிவுக்கு வரும் விஷயம்.

நான் எனக்கு இதுவரையிலும் சேகரித்து கிடைத்த விஷயங்களைக்கொண்டு உழவனுக்கு எவைகளால் நன்மை தீமை என்பதை கூறமுடியும். வயல் பரப்புகளில் சுற்றியிலுமுள்ள பூச்சி புழுக்களை தின்று வாழும் வர்க்கங்களை யெல்லாம் விவசாயி நண்பனுக சிறிதும் யோசனையில்லாமல் எடுத்துக்கொள்ளலாம், ஆனுல் வயல்வரம்புகளில் சுற்றிக்கொண்டேயிருக்கும் மைனு போன்ற பறவைகள் சில காலங்களில் அல்லது அதனுடைய சில பிராயங்களில்தான் உபயோகமாக இருக்கமுடியும். சிட்டுகுருவிகளைப் பற்றி தீவிர ஆராய்ச்சி செய்தே முடிவு கூற முடியும்.

தோழன்.	விரோதி
1. மீன்கொத்திபறவை	1. காட்டு காகம்
2. வானம்பாடி	2. நாட்டு காகம்
3. ஆந்தை	3. கிளிகள்

சாதாரணமாக எல்லா வயல் வரப்புகளிலும் எக்காலத்திலும் காணப்படும் பட்சி இனங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. பட்சிகளினுல் நன்மையே ஏற்படுகிறது என்பதை திடமாகவும் உறுதியாகவும் கூறலாம். ஆனுல் பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் இனங்களைப்பற்றி போதுமான காரணங்கள் இருப்பதால் அவைகளை துலைத்து விடுவதற்கு முற்படவேண்டிய நியாயம் இருக்கிறது.

மேலே கூறிய பட்சி ஜாதிகளை அடையாளம் கண்டுகொள்வதில் அநேகருக்கு கஷ்டம் இருக்காது.

ஹிந்துஸ்தானியில் கோல்சா அல்லது கல்கிளிச்சி என்று சொல்லப்படும் இப்பறவை எப்பாகத்திலும் கருத்த நிறமும் முள் போன்று விளங்கும் வாலுடன் விளங்கும் இப்பட்சி நேராக நிமிர்ந்து நிற்கும் பயிர்களின் மேலும் தந்திக்கம்பத்தின் பேரிலும் சாதாரணமாக காணப்படும். இவ்வாறு இருந்துகொண்டே பூச்சி புழுக்களின் நடமாட்டத்தை கூர்ந்து நோக்கி பாயும் தன்மையுடையன. அல்லாது பறந்துகொண்டு இருக்கும் வெட்டுக்கிளி, பாச்சான் போன்றவைகளை தன் இறகுகளால் சிதரடிக்கும் தன்மையுடையன. தவிரவும் இந்த பறவைகள் மேய்ந்துகொண்டிருக்கும் கால்நடைகள் புல் மேயும் காலங்களில் துரத்தியடிக்கப்பட்ட தத்துக்கிளி மற்றும் இதர பூச்சிகளையும் பாய்ந்து கவ்விக்கொள்ளும் தன்மையுடையன.

ஹிந்துஸ்தானியில் நீல்கந்த் அல்லது சப்ஜாக் என்று சொல்லும் இப்பறவை இனம் ஒரு கம்பத்திலிருந்து மற்ற கம்பத்திற்கு பறந்து செல்லும் காலங்களில் அதன் மீது சூரிய வெளிச்சம் படுவதால் அதன் நீல நிற ஜொலிப்புகளிலிருந்து இதை நன்ருக தெரிந்துகொள்ளலாம். இவைகள் வழக்கமாக தந்திக்கம்பிகளின் பேரிலும் மற்றும் பயிர்களைச் சுற்றியுமுள்ள இடங்களிலிருந்து வெட்டுக்கிளி மற்றும் இதர புழுக்களையும் பாய்ந்து பிடித்துக்கொள்ளுகின்றன. சில சமயங்களில் கிளைக்குக் கொண்டுபோய் நன்ருக சக்கையாகப் பிழிந்து விழுங்கும் தன்மை கொண்டன. சட்டம் இடம் கொடுக்காதபோதிலும்கூட இதன் ஜோதிமயமான ஒளிர் பிரகாசிக்கின்ற சிறகுகளுக்கு உள்ளூரிலும் வெளியிடங்களிலும் ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டுள்ளதால் இதை துன்புறுத்தி கடத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

எல்லா ஆந்தைகளும் அன்ருட உணவுக்கு உபயோகிக்கப்படும் பட்சி ஜாதிகளும் ராசாளியும், வயல்களில் எலிகளையும் மற்றவைகளையும் அழித்து இவைகள் மறுபடியும் வளர்ந்தோங்க முடியாதபடி காப்பாற்றி பெரிய உபகாரம் செய்துவருகின்றன. தற்போது செய்து வருவதுபோல் கண்டவுடன் கொல்ல முற்படாமல் இவைகளின் வளர்க்சியில் ஊக்கம் எடுத்துக்கொண்டு காப்பாற்ற முற்பட வேண்டியது கடமையாகும். இங்கே சாதாரணமாகக் காணப்படும் இரண்டு வகை ஆந்தைகளைப்பற்றி எடுத்துக்கொள்வோம். ஒன்று கோட்டான் மற்றொன்று மரங்கொத்தி பறவை. இவைகள் மைனுவைப் போல அளவிலும் சிறிது வாலுடன் கூடி உருண்டையான தலையும் இமைகொட்டாது பார்க்கும் கண்கள் கொண்டதுமாகும். மங்கலான பழுப்பு நிறத்தில் சிறிது வெள்ளைப் புள்ளி கொண்ட இது பகல் நேரங்களில் மரத்தின் சந்துபொந்துகளிலும் அஸ்தமன சமயத்தில் இரைதேட வெளியே வரும். சில சமயங்களில் பகல் நேரங்களிலும் வெளியே சுற்றித்திரியும். இதன் முக்கிய உணவு தத்துக்கிளி, வெட்டுக்கிளி, பல்லி, சுண்டெலி போன்றவைகளே. மரங்கொத்தி பறவை - இது உருவத்தில் ராசாளிபோன்று மஞ்சள் பழுப்பு நிறமான நிறைத்தையுடையது. இதன் தலையில் இறக்கைகள் ஒன்ருகச் சேர்ந்து கொம்புபோல விளங்கும்.

ஹிந்துஸ்தானியில் கவாவா என்று சொல்லும் இருவகை காகங்களைப்பற்றி நான்கூறத் தேவையில்லை. காடுகளில் வசிக்கும் இப்பறவையானது கருத்த நிறத்துடனும் நாடுகளில் காணப்படுவன கழுத்தில் சாம்பல் நிறத்துடனும் காணப்படும் இரண்டு ஜாதிகளும் "கேழ்வரகு, கம்பு" போன்ற தானியங்களுக்கு பெருத்த நாசக்கேட்டை விளைவிக்கின்றன. நகர்ப்புறங்களில் தோட்டி வேலைகளில் ஈடுபட்டபோதிலும்கூட இதனல் பெருத்த உபயோகம் என்று கருத முடியாது.

பச்சைக்கிளி: ஹிந்துஸ்தானியில் தோதா என்று சொல்லப்படும் இப்பறவைகளில் பலஜாதி உண்டு. இவைகளால் பயிர்களுக்கும் பழங்களுக்கும் பெரும் நாசம் ஏற்படுகின்றன. இவைகளுக்கு விவசாயிகளிடமிருந்தோ அல்லது மற்ற வேறு சமூகத்தாருடைய அனுதாபமோ கிடையாது. இவைகளின் வளர்ச்சியை ஒரு வரம்புக்குள் கட்டுபாடு செய்து வைத்திருப்பது நலம்.

ஈரோடு தாலூக்காவில் 95 ஆயிரம் குடும்பங்கள் பரிதவிப்பு.

ஈரோடு தாலூகா விவசாயிகள் சங்கத் தலைவர் டாக்டர் ல. கி. முத்துசாமி பின் வருமாறு அறிவிக்கிருர்:—

ஈரோடு தாலூகாவில் சுமார் 75 ஆயிரம் தானியக் கார்டுகளும் 29 ஆயிரம் கலப்பு கார்டுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த 95 ஆயிரம் குடும்பங்களுக்குச் சென்ற ஜனவரி மாதத்திலிருந்து தானியம் போடுவது கிடையாது. தானியக்கார்டுகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு தினம் இரண்டு அவுன்ஸ் அரிசியும், கலப்பு கார்டு உள்ள குடும்பங்களுக்கு 4 அவுன்ஸ் அரிசியும் தான் கிடைக்கின்றன. இரண்டு அல்லது நான்கு அவுன்ஸ் அரிசிமட்டும் சாப்பிட்டு ஒருவர் உயிர் வாழ முடியுமா? பட்டினியால் வாடுபவர்கள் வெளியிடங்களில் வாங்கக்கூடாது என்கிறது சர்க்கார். மீறி வாங்கினல் சிறை தண்டனை கிடைக்கிறது.

சர்க்கார் இவ்விஷயத்தைக் கவனித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சரியான முறையில் ரேஷன் கொடுக்க முடியாவிட்டால் பங்கீட்டை எடுத்துவிட்டு நிவாரணக்கடைகள் ஏற்படுத்தினல்கூடப் பரவாயில்லை.

இனிய தொழில்

E. பாலகிருஷ்ண நாயுடு, B. A., B. L.

ரிஜிஸ்தர் ஆபீசிலும், கோர்ட்டுகளிலும், "உம்முடைய தொழில் என்ன?" என்று அடிக்கடி கேட்கிறார்கள் அனேகம்பேர் "சுக ஜீவனம்." என்று பதில் சொல்லுகிறார்கள்.

இவர்களுடைய அர்த்தத்தின் பிரகாரம் சுகஜீவனம் என்பது, வேலைவெட்டி செய்து சம்பாதிக்கும் அவசியமில்லாமல், நகக்கண்ணில் மண்படாமல், பெரியவர்கள் சம்பாதித்த சொத்திலிருந்து கிடைக்கும் குத்தகை, வாடகை, வட்டிமுதலிய வரும்படிகளைக் கொண்டு சுகமாக ஜீவனத்தை நடத்துதல்.

இந்தச்சோம்பேறிச் சுகஜீவிகளின் எண்ணிக்கை இனிமேல் நாளுக்குநாள் குறைந்து கொண்டுவருமென்பதில் சந்தேகமில்லை. சுதந்திரக்குடியரசில் 'சும்மா இருப்பதே சுகம்' என்னும் சுகஜீவிகளுக்கு இடமில்லை. ஒவ்வொரு பிரஜையும் அறிவாற்றலுக்கியன்றளவு உற்பத்திப்பெருக்கத்தில் ஈடுபட்டால் தான் நாடுநலமடையும். "ஒரு தொழிலுமில்லாதான் முகடியாவான்." என்றார் முன்னோர். சுகஜீவிகள் சமூகவிரோதிகளாகவும் பாவிக்கப்படலாம். பெருத்த சுகஜீவிகளான மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் இருக்குமிடம்தெரியவில்லை, தங்கள் சொந்தச்செலவுக்கு வி. பி. மேனனுக்கு விண்ணப்பம் போடுகிறார்கள். மன்னாதி மன்னர்களெல்லாம்.

நம்குடியரசின் ஒவ்வொரு பிரஜையும் ஏதோ ஒரு ஆக்கல் தொழிலில் ஈடுபட்டுத் தான் வாழவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இனிமேல் அதிகமாகும்.

"பணக்காரனின் மகன் பணக்காரன்" என்கிற வார்சு உரிமைபோய். "உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்: வெளுப்பவனுக்குத்தான் துணிசொந்தம்." என்று ஒருபக்கம் கூச்சலிடுகிறார்கள். சிறைப்பவனுக்குத் தான் தலை சொந்தம்" என்று சொன்னாலும் சொல்லுவார்கள் ஆகையால் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தையோ, துணியையோ, தலையையோ, வேறொருவரை நம்பிக்கொடுக்காமல் தமக்குத்தாமே எல்லாம் செய்து கொள்ள வேண்டும்.

முக்கியமாக நம்வாலிபரிடம் "சுகஜீவன" மனப்பான்மை வளரவிடாமல், தொழிலின் அவசியத்தை அவர்களுக்குப்போதிக்க வேண்டும்.

"எந்தத் தொழில் நல்லதொழில்? இனியதொழில் எது?" என்ற கேள்வி எழுகிறது.

தொழில்களிலெல்லாம் தலைமைத்தொழில், ஜீவ நாடித்தொழில், விவசாயம்தான் என்று பழங்காலத்திலிருந்து நம் நாட்டில் கருதப்பட்டுவந்திருக்கிறது. எல்லாத்தொழில்களையும் ஆராய்ந்து பார்த்து, "என்றும் உழவே இனிது" என்று எடுத்துக்காட்டுகிறார்கள், நம் முன்னோர்கள்.

லாப நஷ்டக்கணக்குப்பார்த்தால், உழுபவனுக்கு உழக்குக்கூட மிஞ்சாமல், "இனிய தொழில்" செய்பவன் இன்சால்வெண்டாயிருக்கலாம்: ஆனால், பசியோ பசியென்று பட்டினிகிடந்து பரிதபிக்கும் பஞ்சை பனாதிகளைப்பார்த்தால் சோறோ சோறென்று சுருண்டு சாகும் சூழ்நிலையைச் சிந்தித்தால், தானிய உற்பத்தி செய்வதைவிடச் சிறந்த சமூகத்தொண்டுவேறொன்றுமில்லை. தற்காலம் "பற்றாக்குறைப்" பொருளாதாரத்தில் பெருமைவாய்ந்தபேருபகாரம், தன்னலங்கருதாத்தனித்தியாகம் உயிர்ப்பிச்சை தரும் பயிர்த்தொழிலேயாம்.

பயிர்த்தொழிலைப்பற்றி ஆயிரமாண்டுகளுக்குமுன் தமிழர் எழுதியது இன்றைய, இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் பிற்பகுதியின் சமூகக் கொள்கைக் கோட்பாடுகளுக்கும் பொருத்தமாயிருப்பதைப் பார்த்தால் ஆச்சரியமாயிருக்கிறது.

ஒருபாட்டு.

ஏரு மிரண்டுளதாய், இல்லத்தில் வித்துளதாய்,
நீரருகேசேர்ந்த நிலமுளதாய் — ஊரருகே
சென்றுவர வெளிதாய்ச் செய்வாரும் சொற்
கேட்கில்
என்றும் உழவே இனிது.

இந்தப்பாட்டில் பொதிந்துள்ள விவசாய அறிவும், சமூகத்தத்துவங்களும் (Social Philosophy) ஆருயலாம்.

ஏரும் இரண்டுள்ளதாய் :- நாலெருதுப் பண்ணையம் சுமார் ஆறு ஏகராத்தோட்டம். "பெரிய நிலச்சுவான்தார்களை யெல்லாம் மட்டந்தட்ட வேண்டும். ஒவ்வொருவரும் இவ்வளவு ஏக்கரா நிலத்துக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது" என்ற சோஷ்யலிஸ்டு கொள்கைக்கு ஏற்றதாயிருக்கிறது. குடும்பத்துக்கு ஆறு ஏக்ரா என்று பிரித்துக் கொடுத்தால் ஏழை பணக்காரன் என்கிற மேடு பள்ளம் அதிகமில்லாமல் சுக ஜீவிகளுக்குச் சூடு போட்டது போலாகும். இந்தப் பாட்டெழுதுங்காலத்திய சமூகம் இவ்வாறு மட்டந் தட்டிய சமூகமாயிருந்திருக்கலாமென்று நினைக்க இடமிருக்கிறது.

இல்லத்தில் வித்துளதாய்:— பொறுக்கு விதைகளின் அத்தியாவசியத்தைப் பற்றி அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டார் (இங்கிலீஷ் சொன்னால் தான் அதற்குத் தனிமதிப்பு) அனேக ஆருய்ச்சிகள் நடத்தி, "நல்ல விளைவு தரும்" என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜோடிக்கணக்கான நிபுணர்கள் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து கண்டுபிடித்த ஆருய்ச்சி உண்மையை இந்த அடிகளில் காணலாம்.

நீரருகே சேர்ந்த நில முளதாய்:— தண்ணீர் வசதியிருந்தால் முட்டில்லாமல் மூன்று போகமெடுக்கலாம். பருவமழையில்லாமல் குடி தண்ணீருக்கே பஞ்சமாயிருக்கும் இக்காலத்தில் நீரருகே சேர்ந்த நிலம் குதிரைக் கொம்பாயிருக்கிறது.

ஊரருகே சென்று வர வெளிதாய்:— மகாத்மா காந்தியடிகள் தம்முடைய பொருளாதாரத்திட்டத்தில் ஐரோப்பியர் அனுசரிக்கும் குவியல் முறையைக்கண்டித்து பாரத தேசத்தின் பழங்காலப் பரவல் முறையைக் கைக்கொள்ளவேண்டு மென்கிறார். குவியல் முறை என்பது பல பெரிய கைத்தொழில்கள் குறித்த சில பட்டணங்களிலும், சில முதலாளிகளிடமும் குவிந்து சேர்ந்து, பெரும்பாலான மக்களை வறுமைக்குள்ளாக்கும், குவியல் முறையால் முதலாளிகள் அதிக பணக்காரர்களாக, ஏழைகள் அதிக வறுமையிலாழ்வார்கள்.

பரவல் முறைப்படி கைத்தொழில்கள் நாடு முழுவதும் பரவி, செல்வமும் பரவி நிற்கும். விவசாயமும் அப்படியே.

நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் ஒரே நிலச்சுவான்தாருக்குப் பல விடங்களிலிருந்தால், குத்தகை விட்டாலுங்கூட, அந்த ஒருவருடைய திறமையைப் பொறுத்துத்தான் வரும்படி கிடைக்கும். அதே நிலத்தைப் பரவல் முறையாக, சுமார் அவ்வாறு ஏகராவாகப் பிரித்துப்பலபேரைச் சாகுபடி செய்யச் சொன்னால் மாசூல் அதிகமாகும், இவ்வாறு நிலங்கள் துண்டுவிழுந்தால், ஜன நெருக்கமும், அவர்கள் வாழும் கிராமங்களும் பரவிப்போகும், கிராமங்களைச் சுற்றியநிலங்களே அதிகமாகும். அப்போது நிலங்கள் பெரும்பாலும் ஊரருகே, சென்றுவர வெளிதாய்" காவல் கட்டுக்கு ஏற்றவையாயிருக்கும்.

செய்வாரும் சொற்கேட்கில்:— எந்தத் தொழிலும் திறமையாகவும் செவ்வையாகவும் நடப்பதற்கு தொழிலாளிகளுடைய ஒத்துழைப்புவேண்டும். தொழிலாளரின்றேல் தொழிலில்லை. தற்காலத்தில், பலவிடங்களில் நடப்பதுபோல் 'ஸ்ட்ரைக்குகள்' (வேலை நிறுத்தங்கள்.) ஏற்பட்டால் தொழில் நசித்துவிடும். மேலும், இன்றியமையாத, ஜீவாதாரத் தொழிலான விவசாயத்தொழிலில் வேலை செய்பவர்கள் 'ஸ்ட்ரைக்' செய்தால் நாடு நாசம்தான் எனவே, செய்வார் சொற்கேட்பது மிக அவசியம். தற்கால 'ஸ்ட்ரைக்'குகளை எதிர்பார்த்துத்தான் ஆயிரமாண்டுகளுக்கு முன் இப்படி எழுதி வைத்தார்களோ என்னமோ என்று ஆச்சரியபபடவேண்டியிருக்கிறது.

என்றும் உழவே இனிது:— மேலே சொன்னவைகளெல்லாம் பொருந்தினல் என்றும் உழவுதான் இனியதொழில்.

"கூட்டுறவு" இயக்கத்தில் நம்பிக்கை

(சி. எம், இராமச்சந்திரன் செட்டியார். பி. ஏ. பி. எல்.)

★

எங்கள் ஊரிலிருந்து ஒரு அறிஞர் மேல் நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் சென்றார். இங்கிலாந்து முதலிய பல நாடுகளைப் பார்த்துவிட்டு டென்மார்க்கு என்ற நாட்டிற்குச் சென்றார். அங்கே பற்பல பொது நிலையங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு மக்கள் வாழ் நிலையையும் ஆராய்ந்தார். அங்கு மக்கள் திருப்தியோடு வாழ்க்கை நடத்துவது போலத் தோன்றிற்று. அதன் காரணத்தை நன்கு அறியவேண்டும் என்று விரும்பினர். அறிஞரோ இங்கு இருந்த காலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தார். ஆகவே டென்மார்க்கு நாட்டுக் கூட்டுறவை அறியவேண்டும் என்றும் விரும்பினர். அங்கிருந்த கூட்டுறவுச்சங்கங்களைப்பார்த்து அவைகளின் நடப்பு முறைகளை நன்கு ஆராய்ந்தார். அங்கு அந்த இயக்கம் வெற்றியோடு நடைபெறுவதைக் கண்டபிறகு மிகுந்த மகிழ்ச்சியுற்று இவ்வித நாட்டில் ஏழையர் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள ஆசைப்பட்டார். ஏனெனில் நமது இந்து நாட்டில் ஏழ்மை எங்கும் தாண்டவம் புரிந்துகொண்டிருப்பதை அறிந்தவர். ஆகவே கூட்டுறவு வெற்றிகரமாக வேலைசெய்யும் டென்மார்க்கின் ஏழ்மையை நீக்குவதற்கு அவர்கள் என்ன செய்துள்ளார்கள் என்று அறிய மிகுந்த ஆவல்கொண்டார். இந்த ஆவலும் எந்த அறிஞருக்கும் இயல்பே அல்லவா! அப்போது ஒரு பெரிய கூட்டுறவு நிலையத் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தார். பல செய்திகளையும்பற்றிப் பேசிவிட்டு ஒரு கேள்வி கேட்டார்.

"ஐயா, உங்கள் நாட்டில் பிச்சைக்காரர்கள் எங்கே? என் கண்ணிற்கு அவர்கள் இன்னமும் படவில்லையே" என்றார்.

"நீங்கள் கேட்பது பிச்சைக்காரர்களைப் பற்றியா! சரி, அவர்கள் எங்கள் நாட்டில் இப்போது இல்லை. முன்னொரு காலத்தில் இருந்தார்கள். அவர்களிடம் இருந்த பிச்சைக்குணம் என்ற பேயை அப்புறப்படுத்தி விட்டோம். ஆகவே அவர்கள் மற்றவர்களைப் போலவே கௌரவ மக்கள் ஆகிவிட்டார்கள்.

அதை எப்படிச் செய்தீர்கள்? "இந்தக் கூட்டுறவு இயக்கத்தினால்தான்". எங்களால் முடியவில்லையே. இன்றும் எங்கள் நாட்டில் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். "உங்களுக்கு இன்னும் கூட்டுறவில் நம்பிக்கை இல்லைபோல் இருக்கிறது. இருந்தால் அதன் முழுப்பலனையும் பெறமாட்டீர்களா?",

'நம்பிக்கை இருந்தால்மட்டும் போதுமா?' என்று கேட்க, "நம்பிக்கைமட்டும் போதாது. மேலும் அதன் கொள்கைகளின்படி சிறிது தியாகமும் செய்து பாடுபட்டால் இறுதியில் பத்து மடங்கு பலன் கிடைக்கும். அப்போது ஏழ்மைப் பேய் தானகப் போய்விடுகிறது."

"நீங்கள் எல்லாரும் படித்தவர்கள். ஆகவே நம்பிக்கையும் விடாமுயற்சியும் இயற்கையாகவே உங்களுக்கு வருகிறது. எங்கள் நாட்டிலோ நூற்றுக்கு 90 பேர் படியாதவர்கள் எப்படி அவைகள் ஏற்படும்."

"கூட்டுறவு ஏற்பட்டால் படிப்பும் வருகிறது. படிப்பு வந்தால் கூட்டுறவும் வருகிறது. இரண்டும் இணைபிரியாத தத்துவங்கள். ஆகவே நம்பிக்கை கொள்ளுங்கள் உடனே வெற்றி வருகிறது. பிறகு ஏழ்மை இருந்த இடமில்லாமல் போய்விடுகிறது" என்றார்.

இந்தச் சம்பாஷணை கூட்டுறவின் பயனை நன்கு அறிந்த எங்கள் ஊர் பெரியார் ஊர் திரும்பியதும் ஒரு பெருங்கூட்டத்தில் இதைப்பற்றிச் சொன்னர். இந்தச் செய்தியைக்கேட்டோம். முயற்சி எடுத்துக்கொண்டோம். ஆனல் மக்களுக்குத் நம்பிக்கை வரவில்லை. பிச்சைக்காரர்களும் தொலையவில்லை.

எங்கள் நாட்டைப்போலவே டென்மார்க்கு நாடும் ஒரு விவசாய நாடுதான்.

யந்திரத் தொழில் மிகக் குறைவு. ஆகவே மக்கள் பெரும்பாலும் நிலத்தை நம்பித் தான் வாழ்கிறார்கள். மேலும் நம் நாட்டைப் போலவே அங்கும் சிறு சிறு குடித்தனங்களே மிகுதி. பரந்த நிலத்தொகுதிகள் இல்லை. அப்படியிருக்க எவ்வாறு விவசாயத்திலே போதுமான ஊதியம் பெறுகிறார்கள். என்பது ஒரு கேள்வி? எங்கள் ஊர் அறிஞர் இதைப்பற்றியும் விசாரித்தார்.

"சிறு நிலங்களை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்தால் எந்தக்,குடித்தனக்காரனும் பிழைக்கமாட்டான். அப்போது நாட்டில் வறுமை தாண்டவம் ஆடிக்கொண்டேயிருக்கும். அவனுக்கு முதல் ஏது? ஆகவே அவன் பிழைக்கமாட்டான் என்றார்.

"ஆமாம் அதுபோல்தான் எங்கள் இந்தியாவிலும் சிறு குடித்தனக்காரர்கள் வறுமையிலேயே சாகிறார்கள் அதனைப் போக்கடிக்க என்ன செய்தீர்கள்?"

"அது மிகவும் எளிது. 10 ஏக்கர் கொண்ட குடித்தனங்கள் 10 சேர்ந்தால் 100 ஏக்கர் ஆகின்றது. இவர்கள் ஒத்துழைத்து எரு முதலியவைகளைப் போட்டு. கூட்டுப் பண்ணையும் நடத்திக் கூட்டுறவுச் சங்க மூலமாய் வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நல்ல இலாபம் கிடைக்கிறது. அதனைப் பத்துப் பேரும் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். ஒற்றைக் குடியானவன் தன் உழைப்பால் பெறும் இலாபத்தைவிடக் கூட்டுப்பண்ணையத்தில் 5 மடங்கு இலாபம் கிடைக்கும். கவலையும் இல்லை. திருப்தியுண்டாகும்."

"நீங்கள் சொல்லும்போது இலகுவாகத் தான் தோன்றுகிறது. ஆனால் எங்கள் நாட்டில் இது நடக்கிறதே இல்லை",

"உங்களுக்கு ஒருவர்மேல் ஒருவர்க்கு நம்பிக்கையில்லைபோல் இருக்கிறது."



ஒலிபெருக்கி

கல்யாணகாலங்களில் குதூகலமடைய வேண்டுமானால்!
கச்சேரிகளில் பரவசமடையவேண்டுமானால்!
பிரசங்கங்களில் தெளிவாக கேட்கவேண்டுமானால்!
விளம்பரம் வெற்றியடையவேண்டுமானால்!

எங்களுடைய தெளிவான ஒலிபெருக்கிகளை அமைத்து, மகிழ்ச்சி அடையுங்கள். எலக்ட்ரிக் கரண்டினாலும் கரண்ட் இல்லாத இடத்தில் பேட்டரிகளைக்கொண்டும் அமைத்துக்கொடுக்கிறோம். எலக்ட்ரிக் லைட்டும் போட்டுக்கொடுக்கப்படும். புதிய சினிமா பாட்டுகள் கொண்ட, கிராமபோன்களுடன் வாடகைக்கு கிடைக்கும்.

கிடைக்குமிடம் :—

M. ஷண்முகம்

நெ. 15/57, வென்னல் நாயுடு வீதி நெ. 2.
கோட்டைமேடு, கோயமுத்தூர்.

குறிப்பு :— பழைய மார்க்கெட்டுக்குள் உள்ள ரோட்டின் தென்புறத்தில் உள்ள V. C. V. ஹாஸ்ட்டலைச் சேர்ந்த15/57 நெ. வீடு.

"ஆமாம், விவசாயிகள் ஏழை மக்கள் படிப்பு இல்லை ஆகையால் இது சாத்திய யம் ஆகிறதில்லை."

"படிப்பு மட்டும் போதாது. நம்பிக்கை இருக்கவேண்டும்" இந்தப் பேச்சையும் அந்த அறிஞர் சொன்னார்.

எங்கள் வட்டத்தில் உணவு ஆலோசனைக் குழு ஒன்று உண்டு. அதற்கு வட்டத்து அரசியல் அதிகாரி தலைவர். மாதத்திற்கு ஒருமுறை அது கூடும். அக்கூட்டத்தில் உணவுப் பங்கீடு, உணவுப் பெருக்கம் முதலிய கேள்விகளை ஆராய்வதுண்டு.

ஒருமுறை கூட்டுப் பண்ணையங்களைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அதற்கு கூட்டுப் பண்ணையாளரும் வந்திருந்தார். அவரும் கூட்டுப்பண்ணைத் திட்டம் ஒன்றை தயாரிப் படுத்தி, அவ்வாறு ஒரு ஊரில் பரீட்சார்த்தமாக நடத்தலாம் என்றார். அந்தக் குழுவில் பெரும்பான்மையானபேர் குடித்தனக்காரர்களே. அவர்களுடைய அபிப்பிராயம் கேட்கப்பட்டது. பெரிய குடித்தனக்காரர்களோ இந்த முயற்சி நடைபெறாது. இது வேண்டியதில்லை என்றார்கள். சிறு குடித்தனக்காரர்களோ எங்களுக்கு உள்ள நிலம் மிகச் சிறியது இதனைக்கொடுத்துவிட்டு நாங்கள் என்ன செய்வது என்றார்கள்.

குத்தகைக்காவது கொடுப்பார்களே ஒழிய கூட்டுறவு நிலையில் நிலத்தை ஒரு சங்கத்திற்கு கொடுக்க விரும்ப மாட்டார்கள். பகுதித் தலைவர்கள் என்ன சொல்லியும், இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தள்ளிவிட்டார்கள். உண்மை என்னவென்றால் ஒருவர்க்கொருவர் நம்பிக்கையில்லாதுதான்:

நம்பினால்தான் வேலையும் கிடைக்கும் நல்ல எரு முதலிய பண்டங்கள் கிடைக்கும். விளைவும் நன்றாக ஆகும். வெளிநாடுகளுக்கு விற்பனையும் செய்யலாம். இலாபமும் பங்கிட்டுக்கொள்ள முடியும். ஆனால் நம்பிக்கை ஏது? ஏழ்மையும் நாட்டைவிட்டு அகலாது,

டென்மார்க்கில் மற்றொரு இயக்கம் விளைபொருள் கூட்டுறவு ஆகும், முட்டை இறைச்சி, பால்வகைகள் முதலியவைகள் கூட்டுறவினால் பெரும் பகுதிகளாக விளைவித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வாழ்க்கை நடத்துவது ஆகும். இந்த வகை உற்பத்தி இந்தியாவில் இல்லை. முட்டை இறைச்சி, பால் இவைகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு உற்பத்தி இல்லை. சின்னஞ்சிறு குடித்தனக்காரர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியுமா? அதற்கு கூட்டுறவுதான் உதவிபண்ணும். விற்பனை செய்வதற்குச் சந்தைகளைத் தேடுவதே மிகச் சிரமமான செய்தி. அதனைத் தேர்ச்சி பெற்ற மக்களே செய்யக்கூடும். அதற்கு கூட்டுறவு நிதிதான் இலகுவாக உதவிபுரியும். டென்மார்க்கு போன்ற சிறுநாடுகளில் நடக்கும் முட்டை முதலிய வியாபாரங்கள் மிகப்பெரிய நாடாகிய நம்நாட்டில் ஏற்படுத்த முடியவில்லை. கூட்டுறவு நன்றாகப் படரவில்லை எனல் வேண்டும்,

டென்மார்க்கில் முட்டை முதலிய செயல்கள் உற்பத்திக் கூட்டுறவாக இருந்தால் நமது நாட்டிலோ நெசவு அப்படிப்பட்ட நிலையிலிருக்கின்றது எனலாம். நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. சென்ற பெரும் போரில் அவைகள் நன்றாக வேலை செய்தன. ஆனால் போர் நின்றவுடன் அவைகளின் வேலை திருப்தியாக இல்லை. காரணம் கூறல் எளிது. போர்க்காலத்தில் வெளிநாட்டுப் போட்டி இல்லை. இப்போது வெளிநாட்டுப் போட்டி மீண்டும் வந்தது. கூட்டுறவு பயன் பெறவில்லை.

பெரிய நிலையில் எதையும் நடத்த நம் மக்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் இல்லை. நெசவுச் சங்கங்கள் மிகச் சிறியவை. ஒரு ஊரில் 1000 தறிகள் இருந்தால் சங்கத்தில் சேருபவர் 50 தறிகாரர்கள்தான். ஆகவே இச்சங்கத்து வேலை ஒரு தனி வியாபாரியின் மொத்த வேலையிலும் குறைந்ததுதான். மேற்கு நாடுகளில் இவ்வாறு, ஊரில் இருக்கும் எல்லா வேலையாட்களும் கூட்டுறவில் சேர்ந்து உழைப்பார்கள். அதுதான் வெற்றி கொடுக்கும்.

உற்பத்திச் சங்கங்களில் பாற்பண்ணைகளில் மட்டும் ஒருவாறு லாபமும் திருப்தியும் ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணம் போர்தான். பாற்பண்ணைகளில் சுத்தமான பால் கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. அதனால் தொழிலும் நன்றாக நடைபெறுகிறது.

மதிப்புரை

"இதுவே எங்கள் கோவை"

ஆக்கியோர் கோவைக்கிழார் C. M. ராமச்சந்திரம் செட்டியார் B. A. B. L., அவர்கள். விலை .ரு 2. கிடைக்குமிடம் கோவை நிலையப் பதிப்பகம் 4/89, திருச்சிப்பாதை கோயமுத்தூர்.

பெயரைக்கேட்டவளவில் உளத்துக் கெட்டாத பொருளொன்றை உள்ளவாறு கண்டனைய ஆச்சரியம் பிறக்கிறது. உண்மையிலேயே கோவையை அறியாதார் மிகச் சிலரேயிருப்பர். கோவையைப்பற்றி இந்நூல் மூலம் அறியக்கிடைக்கும் அவ்வளவு அறிந்தவர்கள் கோவையிலேயே ஒருவர் இருவர் கூட உண்டோ என்பது ஐயப்படத்தக்க தொன்ருகும். நகரின் ஒவ்வோர் பகுதியின் அமைப்பையும் சரித்திரக்கண்கொண்டு நன்கு விளக்குவதுமாத்திரமன்றி எவ்வெக் காலத்து எந்தெந்த அரசர்களால் இந்நகரும் நகரைச்சேர்ந்த கொங்கு நாடும் ஆளப்பட்டதென்றும் தெளிவாக ஆதாரங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே பெயருக்கேற்ப வியக்கத்தக்க பல செய்திகளை ஆதாரத்துடன் ஆராய்ந்து தரப்பட்டிருக்கிறது. கோவை வாசிகள் மட்டும் அன்று தமிழர்கள் அனைவரும் படித்து உணர வேண்டிய பல பகுதிகள் இந்நூலில் பொதிந்து கிடக்கின்றன.

இங்கிலீஷ் காய்கறிகள்

ஆக்கியோர் ச. கு. கணபதி ஐயர் பி. ஒ. எல். விலை அணு 3. கிடைக்குமிடம் கிராம ஜோதி நூலகம் 4 சையது அகமது உஸேன் தெரு, மயிலாப்பூர், சென்னை 4.

உழவன் வாசகர்களுக்கு இந்நூலைப் பற்றியும் ஆசிரியர் ச. கு. கணபதி ஐயர் அவர்களைப்பற்றியும் அதிகம் கூறவேண்டுவதில்லை. உழவனில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளையே முறைப்படுத்தித் தொகுக்கப்பட்டதோர் நூல் இது. இந்நூலின் ஆசிரியருக்கு உழவுத்தொழிலில் உள்ள அனுபவ ஆராய்ச்சிகளை நமது உழவனில் வெளிவரும் அன்னார் கட்டுரைகளிலிருந்தே அனைவரும் அறிந்திருப்பார், ஆதலின் அதிகம் கூறத்தேவையில்லை. இங்கிலீஷ் காய்கறிகளின் மேல், மக்களுக்கு நாளுக்குநாள் மோகம் வளர்ந்துவருவது அனைவரும் அறிந்ததொன்று. முறையாக உற்பத்தி செய்யப்பழகி ஏராளமாக உற்பத்தி செய்தால் விலை சற்றுக்குறைந்தாலும் உற்பத்தியும் தேவையும் அதிகப்பட்டு ஆதாயம் தரக்கூடிய வேளாண்மையாகவே இருக்கும். இதற்கு இந்நூல் பெரிதும் துணை புரியுமென்பதில் ஐயமில்லை.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைப் போலவே உணவுப்பொருள் பண்டசாலைகளும் ஒருவிதமான வெற்றியுடன் நடக்கின்றன. ஆனல் கடன்கொடுக்கும் நிதிகளோ வெகுநன்ருக வேலைசெய்கின்றன. அவைகளில் கூட்டுறவு என்ற நினைவே எவர்க்கும் உண்டாவதில்லை. ஒரு பாங்கிலோ (Bank) அல்லது கடன்காரனே செய்யும் வேலையைக் காட்டிலும் கூட்டுறவுக் கடன் நிதி என்ன விதத்தில் மாறுபட்டிருக்கிறது? இதனை நன்கு ஆராய்ந்து சீர்திருத்துதலே நன்று. டென்மார்க்கு போல நமது நாட்டிலும் ஏழ்மையை அப்புறப்படுத்த வேணுமென்ருல் கூட்டுறவுத் தத்துவத்தை நன்கு நம்பி அதனை நல்ல முறையில் ஆட்கொள்ளுவதே நன்று என்க.

விளம்பரம்.

முதல்தர ஒட்டு மாஞ்செடி மற்றும்
பலஜாதி பழ செடிகள்
விலை விவரத்திற்கு எழுதவும்.
கிடைக்குமிடம்:
கே. எம். ஷாஹுல் ஹமீத் நர்சரி,
ஊத்துக்குளி P. O. (S. I. R.)

நேஷனல்

கிணறு போரிங் மெஷின்

கைவசமிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்

ஞானம்பிகை மில்லில் போரிங் மெஷின் வேலை செய்வதை நேரில் பார்க்கலாம்.

3½ H. P. கெரோசன் எஞ்சினுடன் விலை ரூ. 2305



3 H. P. மோட்டாருடன் விலை ரூ. 2050

தேவைக்கு

கோயமுத்தூர் ஜில்லா விவசாயிகள் சங்கம்,

ஞானம்பிகை மில்ஸ் போஸ்ட்,

கோயமுத்தூர்.

கோவை வேளாள அச்சுக்கூட்டத்தில் அச்சிட்டு, வேளாளர் வாலிப சங்கம் லிமிடெட்டுக்காக
கி. மா. நல்லசாமி அவர்களால் வெளியிட்டப்பட்டது. (ஆசிரியர்: பண்டிதர் ரா. கிருஷ்ணசாமிக்கவுண்டர்.)